உ
ஓம்
பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

" எப்பொரு ளேத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

தொகுதி 9 } ருத்ரோத்காரி௵ புரட்டாசிமீ ௧௳ / 1923௵ செப்டம்பர்மீ 17௳ { பகுதி 3

கடவுள் வணக்கம்.

குறிக ளோடுகுண மேது மின்றியன
லொழுக நின்றிடு மிரும்பனல்
கூட வின்றியது வாயி ருந்தபடி
கொடிய வாணவ வறைக்குளே
யறிவ தேதுமற வறிவி லாமைமய
மாயி ருக்குமெனை யருளினால்
அளவி லாததனு கரண மாதியை
யளித்த போதுனை யறிந்துநான்
பிறிவி லாதவண நின்றி டாதபடி
பலநி றங்கவரு முபலமாய்ப்
பெரிய மாயையி லழுந்தி நின்னது
ப்ரசாத நல்லருண் மறந்திடும்
சிறிய னேனுமுனை வந்த ணைந்துசுக
மாயி ருப்பதினி யென்றுகாண்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே. (1)

தானந் தவஞானஞ் சாற்றரிய சித்திமுத்தி
யானவையெல் லாந்தாமே யாகுமே—மோனகுரு
சொன்னவொரு சொல்லாற் சுகமா யிருமனமே
யின்ன மயக்கமுனக் கேன். (2)

எனக்கு முனக்குமுற வில்லையெனத் தேர்ந்து
நினைக்கவரி தானவின்ப நிட்டை—தனைக்கொடுத்தே
யாசான் மவுனி யளித்தானெஞ் சேயுனையோர்
காசா மதியேனான் காண். (3)

அரும்பொருள் விளக்கம்.

1. அனல் ஒழுக நின்றிடும் இரும்பு அனல் கூடலின்றி அதுவாய் இருந்த படி=நெருப்போடு சேர்ந்து பழுக்கக்காய்ந்த இரும்பு அந்த நெருப் பேயாகாமலும், நெருப்பிற்கன்னியமாகாமலும், தன்குணத்தை மட் டும் இழந்து இரும்பாகவே யிருத்தல்போல்.

ஆணவ அறைக்குளே=ஆணவமாகிய வீட்டிற்குள்ளே.

அறிவதேதுமற=அறியுந்தன்மை சற்றுமின்றி.

அறிவிலாமை மயமாய்=அஞ்ஞானமயமாய்.

[மேலே கூறப்பட்ட இரும்பு திருட்டாந்தம்போல் ஆன்மா ஆணவ மலத்தோடு சம்பந்தப்பட்டு, அந்த ஆணவமேயாகாமலும், ஆணவத்திற் கன்னியமாகாமலும், தன் குணமிழந்து அஞ்ஞானவிருளில் மூழ்கிக்கிடக் கும். அவ்வாறு இருக்கும் ஆன்மாவிற்குப் பகவான் கருணையோடு தநு கரணாதிகளை யளித்தார்.]

அளித்தபோது=(மேற்கண்டபடி) தநுகரணாதிகளைக் கொடுத்தபோது.

உனையறிந்து...நின்றிடாதபடி=உன்னையறிந்து உன்னிற் கலந்து பிரிவற் றுநிற்காமல்.

பல நிறம் கவரும் உபலமாய்=தன் சுபாவ நிலைமையை மறைத்து, தன் னோடு சம்பந்தப்பட்ட பல நிறங்களைக் கவர்ந்து அவைபோலக் காட் டும் பளிங்குக்கல்லை யொத்து.

இப்பளிங்கைப்போல் ஆன்மா கரணாதிகளோடு சம்பந்தப்பட்டபோது தன்னை மறந்து அவற்றின் மயமாய் விடுகின்றதாதலின் "பெரிய மாயை யிலழுந்தி" யென்றார்.

"ப்ரசாத நல்லருளை மறந்திடும்"="பகவான் நமது நன்மைக்காக கரு ணையோடு இத்தநுகரணாதிகளை யளித்தார் என்றதை மறந்து" என்ற படி.

"பகவான் நாம் ஞானமடைவதற்குச் சாதனங்களாகத் தநுகரணாதி களை யளித்திருப்பதால் நாம் அவற்றால் மயங்கி அவற்றின் வயமாகாமல் அவற்றை யன்னியமாக அறிந்து, அவற்றை உதவியாய்க்கொண்டு பரமான் மாவையறிந்து அவரில் இரண்டறக் கலந்து அந்த நிலையில் நிற்கவேண் டும்" என்பது இதன் கருத்தாம்.

2. தாமேயாகும்=தாமாகவே சித்திக்கும்.

ஒரு சொல்=குரு உபதேசிக்கும் மகாவாக்கிய உபதேசமாகிய ஒரு மொழி.

குரு உபதேசித்த ஒரு மொழியில் மயக்கங்கொள்ளாது அதையே மன வடக்கத்தோடு அனுசந்தானம் செய்துவந்தால் இம்மை மறுமைப் பயன் யாவும் சித்திக்கும் என்பது கருத்து.

அந்த ஒரு மொழியைப்பற்றி யிம்மகானே "ஒரு மொழியே பல மொழிக்குமிடங்கொடுக்கும்......குருமொழியே மலையிலக்கு மற்ற மொழி

யெல்லாம் கோடின்றிவற்றுடல் கொள்வதொக்குங் கண்டாய்...” என்ற பாசுரத்தில் அருளியுள்ளது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

3. “ சிட்டை சாதித்தல் மனம் தனக்கு அன்னியமான ஜடமென்று கண்டு அதை யிலயிக்கச்செய்து தன்னை யறிந்து தலைவனிற் கலப்ப தற்கேயாம் ” என்பது இதன் கருத்து.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரி௵ புரட்டாசி௴ ௧௨

கல்வியால் தீங்கு.

இத்தலையங்கத்தைக் கண்டதே நமது நண்பர்கள் முதலில் மிக்க வியப்படைவார்கள். சிலர் இதென்ன நேர்மாறான விஷய மாயிருக்கிறதென்று கருதுவார்கள். ஏனெனில் சாதாரணமாய்க் ‘கல்விச்செல்வமே செல்வத்துளெல்லாந் தலை’ யென்று எல்லா நூல்களும் கூறுகின்றன. ஆன்றோர்கள் கல்வியே கண் என்று அதை யெவ்வளவோ சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். கல்வி அத்தகைய பெருமையுடைத்தாதலின் “ கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு ” என்றும் “ மன்னனிற் கற்றோன் சிறப் புடையன் ” என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அனுபவத்தில் கல்வி இருவகைத்தா யிருக்கிறது. ஒன்று இலக்கிய இலக்கணக் கல்வியாகிய பாஷைக்கல்வி—மற்றொன்று ஆன்மார்த்தக்கல்வி-இவற்றில் முன்னர்க் கூறப்பட்ட சாதாரணக் கல்வி ஒருவனது இயற்கைக் குணத்தை யதிகப்படுத்தமட்டும் வல்லது. அது கத்தியைக் கூர்மைப்படுத்துவதுபோன்றது. அக்கத்தியால் நல்ல காரியமும் செய்யலாம், கெட்ட காரியமும் செய்யலாம். பொருட் செல்வமும் இப்படியே.

இது ஒருபக்கமிருக்க, ஒருவன் எக்காலத்தில் எத்தகைய கல்வி கற்கின்றானே அதற்குத் தக்க பலனையே யடைவான். கமத் தொழில் செய்யவேண்டிய சிறுவன் உலக சரித்திரத்தை வாசித் தால் என்னபயன்? அனாவசியமானதும், பின்னால் கற்போனுக்கு

அவசியமான பலனை யளிக்கக்கூடாததுமான கல்வியால் ஒருவன் பயனடைவதற்குப் பதிலாகத் தீமையே யடைவான்.

ஒரு தனி மனிதனுக்கு எப்படியோ அப்படியே ஒரு ஜாதியாருக்கும் ஒரு தேசத்திற்குமாகும். இப்போது நம் நாடு அடைந்திருக்கும் பரிதாபமான ஏழ்மை நிலைமைக்குக் காரணம் இப்போது நாம் அனுசரிக்கும் கல்விமுறைமையேயாகும். கல்வியாலேயே ஒரு தேசம் மேலான நிலைமையை யடைகிறது என்ற உண்மை ஒருவராலும் மறுக்கொணாதது. அப்படியிருக்க அக் கல்வி தகுதியற்ற கல்வியாயின் அதைக் கையாடும் தேசம் க்ஷீணித்துப்போகத் தடையேயில்லை. மேலுக்குப் பளபளவென்று தோன்றிக்கொண்டு உள்ளே யழுகிக்கொண்டே போகும் ஒரு கனியைப்போல் ஆய்விடும்.

ஒருவனுக்கு அல்லது ஒரு ஜாதியாருக்கு உணவு உடை செல்வம் இவற்றிற்குக் குறைவின்றி, தெய்வபக்தியும் ஆன்மார்த்த விசாரணையும் இருந்தால், அதற்குமேல் ஒரு வண்டி ஜடசாத்திரங்களும், வெளிப்பகட்டாகத் தோன்றும் வீண் நாகரீகப் படாடோபங்களும் என்னத்திற்கு வேண்டும்? அவற்றால் மனம் வெளித் தளுக்குகளில் நாட்டங்கொண்டு, மயங்கச்செய்து முன் இருந்த 'போதும்' என்ற திருப்தியை யழித்து, வீணான பல ஆவல்களையும், கிடைக்காததில் ஏக்கத்தையும், பொறாமையையும், போட்டியையும் உண்டாக்கிக் கடைசியில் மிக்க துன்பத்தையே விளைக்கும்.

முற்கால நிலைமை.

முற்காலத்தில் நம் நாட்டில் கல்வியென்றால் ஈசுரபக்தியோடு பொருந்திய கல்வியாகவே யிருந்தது. கல்வியைக் கடவுளின் அருளாகிய ஒரு சத்தியாக மதித்துப் போற்றுவதும் உபாசிப்பதும் நமது கொள்கை, நமது கல்வி மத சம்பந்தமானதாகவே யிருந்தது. அதனால் நம் நாட்டில் இருந்த வித்வான்கள் ஈசுவர அருள் பெற்றவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வாழ்த்துவதும் வைவதும் பலிக்கக்கூடியவைகளா யிருந்தன. அதனாலே நாயனார்,

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"—என்றனர்.

வேதத்தின் முதலெழுத்தாகிய பிரணவமே முதலில் கற்பிக்கப்

படுவது நம் நாட்டு முறைமை. "ஓம் நமசிவாயசித்தன்னம:" என்பதே முதலில் போதிக்கப்படுவது. கற்பிக்கப்படும் நூல்களும் நீதி, நல்லொழுக்கம், ஈசுர பக்தி யிவைகளைப் போதிக்கும் நூல்களே. அவற்றைக் கற்கும் மாணவர்களுக்கு அச்சமயம் அவற்றின் பூரணப்பொருளும் அருமையும் விளங்காவிடினும் அவற்றைப் பெரும்பாலும் மனப்பாடம் செய்திருப்பதால், பிற்காலத்தில் அவை பயனளிக்கின்றன. அக்காலத்தில் மாணவர்களுக்குக் குருபக்தியிருந்தது. குருபக்தி கடவுள்பக்தி போன்றது. குருபக்தி மனத்திலுள்ள மாசை நீக்கி நற்புத்தி நன்னடக்கை முதலியவற்றை யளிக்கவல்லது.

நம் நாடோ நீர்வளம் நிலவளங்களில் குறைவில்லாதது. எந்தப் பொருளுக்கும் இன்னொரு நாட்டை யெதிர்பாராவண்ணம் நமது வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் அளிக்கக்கூடியது. நம் நாட்டிற்கு வேண்டிய அளவிற்கு அதிகமாகவே யாவும் உற்பத்தியானதால் எல்லா வஸ்துக்களும் மலிவாயிருந்தன. அன்னிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. பிற்காலத்தில் மகம்மதியர் வந்து அரசாண்ட காலத்தும் அந்த நிலை மாறவில்லை. அக்காலத்தில் பணம் அதிகமாக வேண்டி யிருக்கவில்லை.

கைத்தொழிலோ—எல்லாவகைக் கைத்தொழில்களும் உயர்ந்த நிலைமையிலிருந்து வந்தன. நெசவு சிற்பம் முதலிய வேலைகள் உலகைப் பிரமிக்கச் செய்யத்தக்க நிலைமையிலிருந்தன. மேல்நாட்டார் மிக்க அற்புதமான காரியங்களைச் செய்யும் இக்காலத்திலும், அவர்களையே பிரமிக்கச்செய்யும் பூர்வ சிற்ப வேலைகள் நம் நாட்டில் ஏராளமாக விருக்கின்றன. நம்முன்னோர்கள் தொழில்முறைமையில் ஜாதிப்பிரிவினை யேற்படுத்தி யிருந்தார்கள். அவர்கள் மிக்க நன்மையை யெதிர்பார்த்தே அந்தப் பிரிவினையை யேற்படுத்தினார்கள். அதனால் பலவிதமான கைத்தொழில்களும் எப்போதும் நடந்துவந்ததோடு பரஸ்பர உதவியால் ஒற்றுமையான கூட்டுறவும் நிலைத்திருந்தது. வரவரப் பிற்காலத்தில் நமது அறியாமையால் நாம் சரியான கல்விப்பயிற்சியை விட்டு, அன்னிய நாகரீக ஆசாரங்களைக் கைப்பற்றத் தொடங்கியதால் முன்னோர் நன்மை பயக்கும்வண்ணம் செய்த ஏற்பாடு தீமை பயக்கத்தக்க நிலைமைக்கு வருமாறு செய்துகொண்டோம்.

முதல்முதல் நம் நாட்டார்க்கு ஆங்கிலபாஷை கற்பிக்கப்பட்டபோது துரைத்தனப் பாடசாலைகளே தாபிக்கப்பட்டன. பெரும்பாலும் இலவசமாகவே கல்வி கற்பிக்கப்பட்டது. பிறகும் நெடுநாள்வரை கொஞ்சம் ஏழையாயுள்ளவர்கள் மக்களுக்கெல்லாம் இலவசமாகவும் அரைச்சம்பளத்திற்கும் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. நம் நாட்டார்க்கு ஆங்கிலம் கற்பிக்கப்பட்டதற்குக் காரணம் துரைத்தன காரியங்கள் நடைபெறுவதற்காகவே.

அன்னியபாஷை கற்கத் தொடங்கியதுமுதல் அந்த ஆசாரங்களின் வாசனையும் நம்மவர்மேல் தாக்கத் தொடங்கியது. மேல்நாட்டு நாகரீக மயக்கம் மெல்ல மெல்ல இவர்களைப்பற்றத் தொடங்கியது. கிழக்கிந்திய கம்பெனியார் காலம் முதல் நெசவு முதலிய நம் நாட்டுக் கைத்தொழில்கள் அன்னியரால் அடக்கப்பட்டும் நம்மவரது அசாக்கிரதையால் கைவிடப்பட்டும் அழியத் தொடங்கின. இங்கு உற்பத்தியாகும் மூலப்பொருள்களைத்தும் ஏராளமாய் மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. அதனால் அங்குள்ளவர்களுக்கு நல்ல தொழில் கிடைக்கத்தொடங்கியது.

இதனோடு அங்கு எந்திரங்களால் தொழில்செய்வது அதிகரித்தது. இங்கிருந்து செல்லும் மூலப்பொருள்கள் அவர்களுடைய கைத்தொழில்களையும், வர்த்தகத்தையும், அவற்றின் செல்வத்தையும் பெருகச்செய்தன. இதனால் எந்திரங்களின் உற்பத்தியால் அந்த நாட்டாருக்கு நன்மையே பெருகியது. எந்திரத்தால் வேலையிழந்தவர்கள், தொழிற்சாலைகளில் நல்ல ஊதியம் பெற்றும் வர்த்தகம் செய்தும் முன் நிலைமையிலும் மேலோங்கத் தொடங்கினர்கள். சிலர் விவசாயத் தொழிலில் மனத்தைச் செலுத்தி அதில் நல்ல இலாபம் பெறத் தொடங்கினர்கள்.

நம் நாட்டிலோ, மேல்நாட்டு எந்திரங்களில் செய்யப்பட்ட துணி முதலியவைகள் இங்குக் கொண்டுவரப்பட்டுக் குறைந்த விலைக்கு விற்கப்படத் தொடங்கியதால், இங்கு வீடுகளில் செய்துவந்த நூல் நூற்றல், நெசவு, சாயம்போடுதல் முதலிய பலவிதக் கைத்தொழில்களும் அழியத் தொடங்கின. மேல்நாட்டுக் கல்வி யேற யேற நம்மவர்கள் ஒழுங்காய் மேல் பகட்டான உடைகளை யணிந்து துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்வதே மிக்க கௌரவமான தொழில் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டார்கள். மற்ற விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலிய கௌரவத்தொழில்

களனைத்தும் இழிவான தொழில்கள் என்று மதிக்கத் தொடங்கி விட்டார்கள்.

பரம்பரையாய் விவசாயம், கைத்தொழில் செய்துகொண்டிருந்தவர்களுடைய புத்திரர்கள் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படத் தொடங்கினார்கள். கடவுள் சிந்தனை இல்லாக் கல்வி அவர்கள் கற்க நேரிட்டது. அதனோடு அவர்கள் பிற்காலத்தில் செய்யவேண்டிய தொழில் அவர்களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. அத்தொழில்கள்தான் கௌரவத் தொழில்கள் என்ற உணர்ச்சியும் அவர்களுக்கு ஊட்டப்படுவதில்லை. சரியான தாய்ப் பாஷைக் கல்வியாவது மதக் கல்வியாவது போதிக்கப்படுவதில்லை. அவர்கள் வாசிக்கும் புத்தகங்களில் அவர்கள் மேல்நாட்டு ஆசாரம் ஒழுக்கம் நடையுடை பாவனைகளைப்பற்றியே வாசிக்கிறார்கள். நம் முன்னோர் நூல்களில் சிலசில பொருக்கிப் போதிக்கப்படினும் கடவுள் சம்பந்தம் மதசம்பந்தமான பாகங்கள் நீக்கப்படுகின்றன.

இத்தகைய கல்விபயின்றவர்கள் பாடசாலையை விட்டவுடன் தங்கள் பாட்டன் பூட்டன் செய்த தொழில் அவர்களுக்கு இழிவானதாய்த் தெரிகிறது. அத்தொழிலைச் செய்யும் தங்கள் பெற்றோரையும், சுற்றத்தாரையும் இழிதொழில் செய்பவர்களென்று அலட்சியமாய் நடத்தத் தொடங்குகிறார்கள். தாங்கள் கல்வி கற்று நாகரீகமடைந்து மேல் அந்தஸ்தில் ஏறிவிட்டதாக எண்ணி விடுகிறார்கள். விவசாயியின் மகன் ஏரைத் தீண்டவும், கழனியில் கால்வைக்கவுமே அசங்கியப்படுகிறான். பெற்றோர் கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்துகொண்டிருந்தால் இவன் துரைத்தனத்தாரிடம் 15 ரூபாய் சம்பளம் கிடைத்தால் போதுமென்று நகரத்தில் சென்று வேலையிலமர்ந்துவிடுகிறான்.

போதுமான கல்வியில்லாதார் நகரங்களில் மேல்நாட்டார் தாபித்திருக்கும் எந்திரத் தொழிற்சாலைகளில் கூலிவேலை செய்யச் செல்கிறார்கள். இக்காரணங்களால் கிராமங்களில் கல்வியிலும் சாத்திர ஆராய்ச்சியிலும் பயிற்சியடைந்தோர் கிடையாமற் போனதோடு, சரியாய்ப் பயிரிடவும் ஆட்களின்றி ஏராளமான பூமி தரிசாய்க்கிடக்க நேர்வதோடு விளைவும் வரவரக் குறைந்துகொண்டே போகிறது. நகரங்களிலோ ஜனநெருக்கம் அதிக

மாகிச் சுகாதாரங் கெட்டுக் கனவிலுங் கண்டிராத வியாதிகள் உற்பத்தியாகத் தொடங்கிவிட்டன.

உயர்தரக் கல்வி கற்றோரோ தாங்கள் செய்யும் தொழிலையே கௌரவமானதெனக் கருதி தொழில் செய்து பணம் சம்பாதிப்பதும் உலகபோகங்களை யனுபவிப்பதும் மட்டுமே தாங்கள் உலகில் செய்யவேண்டிய காரியம் என்று கருதுகிறார்களேயன்றித் தாய் நாட்டைப்பற்றியாவது தாய்ப்பாஷையைப்பற்றியாவது எள்ளளவும் சிந்திப்பதேயில்லை. பெற்றோர்களோ தங்கள் பிள்ளைகள் "நாலு கோணை யெழுத்து கற்றுக்கொண்டால்தான் இக்காலத்தில் ஜீவனம் செய்யலாம்" என்று கருதுகிறார்கள். வயிற்றுக்குச் சரியாய் உணவு கிடைப்பது கஷ்டமாயினும், தீபப் பிரகாசத்தைக்கண்டு மயங்கி அதில் வீழ்ந்து மடியும் விட்டில்போல், மேல் தளுக்கையே கௌரவமென மதித்து அதில் மகிழ்ச்சி யடைகிறார்கள். நம் நாட்டில் செய்யப்பட்ட பொருள்களை யிழிவாகக்கருதி, மேல்தளுக்கில் மயங்கி மேல்நாட்டுச் சாமான்களையே யதிக விலை கொடுத்து வாங்கத் தொடங்கிவிட்டார்கள். இதனால் நம் நாட்டில் பொருள் வருவாய் குறைவதோடு, போதுமான வருமானமில்லாதிருந்தாலும் வீண்செலவு அதிகமாகிவிட்டது. இவற்றால் பலவிதத் துன்பங்களே நமக்குப் பலனாகக் கிடைப்பதன்றி நன்மை கிஞ்சித்துமில்லை. நம்மவர்களுக்கு இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நல்வழித் திருப்ப அவகாசமில்லையோ, அல்லது நம் நாட்டுக்கு இன்னம் நற்காலம் வரவில்லையோ அதனைக் கடவுளே யறியவேண்டும்.

நம் க்ஷேமத்திற்கு வேண்டிய கல்வியைக் கற்காதது நமது குற்றமேயாகும். மேல்நாட்டார் எம்மாதிரி நடந்து முன்னேற்றமடைந்தார்கள் என்ற வழியை யறிந்து அவ் வழியில் செல்ல நம்மவர்கள் இன்னம் முயலவில்லை. பகவான் அறிவைக் கொடுத்திருக்கிறார். அதைச் சரியான வழியில் உபயோகிக்காதது நமது குற்றமன்றோ. இனியேனும் பெற்றோர் தம் மக்களுக்கு இக்காலத்திற்குத் தகுதியும் அவசியமுமான கல்வியைக் கற்பிப்பதில் சிரத்தை யெடுத்துக்கொண்டாலன்றி நாம் க்ஷேமப்படுவது அரிதேயாகும். விரிவஞ்சி இதனோடு நிறுத்துகின்றோம். ஆண்டவன் அருள்புரிவாராக.

ஓம் தத்ஸத்.

தாம்பூலத்தின் குணம்.

[இது ஸ்ரீமான் ராவ்ஸாஹேப் R. கிருஷ்ணராவ் போன்ஸ்லே அவர்கள் (Asstt. Secretary to the Commissioner for Govt. Examinations, Madras.) எழுதியது.]

சென்னையில் கவர்னராகவிருந்த (H. E. the Right Honourable M. E.) கிராண்ட் டப், F. R. S. அவர்கள் ஒரு சமயத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

இந்தியா கிழக்கும் மேற்குமாகிய இரண்டு பெரிய நாகரீகங்கள் சந்திக்கும் தேசம். புத்திசாலியாகிய எவனும் பூர்வீக நாகரீகத்தில் உள்ள நல்லவற்றைப் பாதுகாக்கவேண்டும், புதிய நாகரீகத்திலுள்ள நல்லவற்றையும் பின்பற்றவேண்டும். பிப்ரவரிமீ வெளியான தேகசுகம் (Health) என்ற சஞ்சிகையில் தாம்பூலத்தைப் பற்றியும், மார்ச்சுமீ சஞ்சிகையில் எண்ணெய் ஸ்நானத்தைப்பற்றியும் பத்திரிகாசிரியர் வரைந்துள்ள குறிப்புகளைக் கண்டபின், தேசத்தின் சீதோஷ்ண நிலைமையைக் கவனிக்காமலே தாம்பூலம், எண்ணெய் ஸ்நானம் முதலிய கீழ்நாட்டு வழக்கங்களை அடியோடு தள்ளவேண்டும் என்று கருதுகிறவர்களுக்கு, இச்சஞ்சிகைக் கீழ்நாட்டு ஆசாரங்களின் நன்மையை விளக்கிக்காட்டும் ஓர் மத்தியஸ்தன் போல் வேலை செய்யத் தொடங்கியிருக்கிறதென்று கூறத் துணிவேன். தாம்பூலம் ஓர் புராதனமான ஏற்பாடு. தாம்பூலமின்றி இந்துக்களுக்குள் கலியாணம் நடவாது. எல்லா சுபகாரியங்களுக்கும் தாம்பூலம் ஓர் அவசியமான உபகரணம். மேல்நாட்டாருக்குள் ஒருவர் சுகத்திற்காகச் சாராயம் அருந்தும் வழக்கம் இருப்பதற்குப் பதிலாகக் கீழ்நாட்டில் தாம்பூலம் இருக்கிறது. சுமார் இருபது வருடங்களுக்கு முன் லெப்டினெனன்ட் கர்னல் W. B. ப்ரென்னிங் I. M. S. C. I. E. (சைனியத்திலுள்ள டாக்டர்) தினம் மும்முறை-ஒவ்வொரு போஜனத்தின் பின்னும்-தாம்பூலம் அணியும்படி எனக்குக் கூறினர். அன்று முதல் நான் யாரேனும் தாம்பூல மணிந்திருப்பதைக் கண்டால் குரும்புத்தனமாகச் சிறிப்பதை நிறுத்திக்கொண்டேன் என்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன். அவர் கூறிய புத்தியை ஒரு மத சம்பந்தமான கடமையாய்க் கருதி யதன்படி நடந்துவந்தேன். "அது ஜீரணசக்தியையளிக்கும் நல்ல வஸ்து" என்று அவர் கூறிய மொழிகளை நான் நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறேன். எப்படியாயினும் என்விஷயத்தில் அது ஜீரணசக்தியை யுண்டாக்கும் வஸ்துவாகவே யிருந்தது, இருக்கிறது, இனியுமிருக்கும். தெலுங்கு பாஷையில் சிறந்த கவிவாணரும் ஞானியுமாகிய வேமன்ன என்பவர் தமது ஒரு கவியில் தாம்பூலம் (பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு) பற்கள் கெடாதபடி காக்கும் ஓர் ஔடதம் என்றும், அதையணியாதிருப்பது மிக்க அசுத்தம் என்றும் கூறியிருக்கிறார். (C. P. ப்ரௌன், I. C. S. என்பவரின் வேமன்ன சதகமொழிபெயர்ப்பு) நான் அனுபவிகளின் மேற்கோள்களைக் காட்டுவதில் விருப்பமுடையவன்.

2

மும்முறை தாம்பூலம் அருந்தவேண்டுமென்பதைப்பற்றி அனுபவமாயறிந்தவர்களில் நான் ஒருவன்—'ஆல்பருனி' என்பவர் இந்தியாவைப்பற்றி வரைந்துள்ள நூலில் "ஹிந்துக்களுடைய நாடு உஷ்ணமானது. தேகத்தின் உள்ளவயவங்கள் குளிர்ச்சியாயிருக்கின்றன. இயற்கையாக உண்டாகும் உஷ்ணம் அவர்களில் பலஹீனமடைந்திருக்கிறபடியால் ஜீரணசக்தி பலஹீனப்பட்டிருக்கிறது. அதற்குப் பலனுண்டாக்க அவர்கள் போசனத்திற்குப்பின் வெற்றிலை பாக்கை மென்று தின்னவேண்டும். காரமான வெற்றிலை தேகத்தின் சூட்டை யதிகமாக்குகிறது. வெற்றிலையின்மேல் தடவியிருக்கும் சுண்ணும்பு, ஈரமாயுள்ளவற்றை யெல்லாம் உலர்த்திவிடுகிறது. பாக்கு பற்களுக்கும், பல்லீருக்கும், நீனிப்பைக்கும் துவர்ப்பை யுண்டாக்குகிறது.

ஸ்ரீமான் ஸர் பகவத்ஸிங்ஜீ (H. H. Sir Bhagavat Singjee, N. D. F. R. C. P. E., Thakore Saheb of Gondol) கொண்டால் தாகூர் ஸாஹேப் அவர்கள் எழுதியுள்ள ஆரிய வைத்தியசாஸ்திர சரித்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார்:—

"போஜனத்திற்குப் பின் (Aloe-smoking அல்லது) ஜாதிக்காய், ஏலம், இலவங்கம் முதலிய வாசனைத் திரவியங்களோடு தாம்பூலம் தரிப்பது நலம். ஏனெனில், போஜனத்திற்குப்பின் அதிகமாகும் கபத்தை அது அகற்றும் சக்தியுடையது. தாம்பூலம் துவர்ப்பையளிக்கும், உற்சாகத்தைத் தரும், பரிமளத்தை யளிக்கும், வாயுவைக் கண்டிக்கும், சம்போக சக்தியை யளிக்கும். தாம்பூலம் தேகத்தில் வாயுவையும் ஆயாசத்தையும் குறைத்து இரத்தத்தையும் சுக்கிலத்தையும் விர்த்திசெய்கிறது. அது கபத்தைக் கண்டிக்கும் ஓர் நல்ல மருந்தாகும். அளவின்படி வெற்றிலையோடு சேர்க்கப்படும் வஸ்துக்கள் காசுக்கட்டி, சுண்ணும்பு, பாக்கு, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஏலக்காய் முதலிய வாசனைத் திரவியங்களாம்—மற்ற வேளைகளைக் காட்டிலும் காலையில் அணியும் தாம்பூலத்தில் மற்ற எல்லாவற்றைக்காட்டிலும் பாக்கு கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். நடுப்பகலில் காசுக்கட்டி கொஞ்சம் அதிகமாகவும், இரவில் சுண்ணும்பு சொல்ப அதிகமாகவும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதனுல் சுவாசத்திலுள்ள துர்க்கந்தம் நீங்கிப் பரிமளமுண்டாவதோடு கண்டத்தொனி விர்த்தியடையும். பல் வியாதி, கண்வியாதி யுடையோர்க்கும், ஔஷதம் புசிப்போர்க்கும், போதையிலிருப்போர்க்கும் தாம்பூலம் நல்லதல்ல. பதார்த்தகுண சிந்தாமணி என்ற நூலில் தாம்பூலத்தினுல் உண்டாகும் நன்மைகளும், அதனுல் தீரும் வியாதிகளும் கூறப்பட்டிருக்கின்றன. இதற்குமட்டும் 16 கவிகளிருக்கின்றன. அவற்றிற் கூறப்பட்டிருக்கிறதாவது:—

"இலங்கைப் பாக்குகள் நல்ல குணமுடையவை. முதலில் கொஞ்சம் வெற்றிலையை வாயில் போட்டு மெல்லவேண்டுமேயன்றி, சாதாரண

மாய் யாவரும் போட்டுக்கொள்வதுபோல் பாக்கை முதலில் போட்டுக் கொள்ளலாகாது. வெற்றிலையிலுள்ள காம்பு நரம்புகள் நடுத்தண்டு முதலியவற்றை நீக்கிவிடவேண்டும். தாம்பூலத்தை மென்றபின் முதல்வரும் உமிழ்நீரும் இரண்டாம்முறை வரும் உமிழ்நீரும் விஷமாதலின் அவற்றை யுமிழ்ந்துவிடவேண்டும். காலைத்தாம்பூலத்தில் பாக்கைக் கொஞ்சம் அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் தாராளமாய் மலசுத்தியாகும். மத்தியானத்தில் சுண்ணாம்பு சொல்பம் அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் தீபன சக்தியையுண்டாக்கும்; இரவில் வெற்றிலையைக் கொஞ்சம் அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் சுவாசத்திற்கு நறுமணத்தை யளிக்கும்."

விரிவஞ்சி இந்த வியாசத்தில் எண்ணெய் ஸ்னானத்தைப்பற்றி வரைய நான் விரும்பவில்லை. ஆனால் ஹெல்த் (Health) என்ற சஞ்சிகையில் வெளியாகி யிருப்பதை இங்கு கூறுகிறேன். "இந்தியாவைப்போன்ற உஷ்ணதேசத்தில் வாரத்திற் கொருமுறையேனும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்யவேண்டுவது அத்தியாவசியமாகும். மகா மேதாவியாகிய ஔவை பிராட்டியார் "சனிநீ ராடு" என்று கூறினார். தென்னிந்தியாவில் வாரம் இருமுறை, ஆடவர் புதன், சனியும், ஸ்திரீகள் செவ்வாய், வெள்ளியிலும், எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்னானம் செய்வது வழக்கம்."

குறிப்பு :—இதை வாசிப்போர் வாசித்ததும் மறந்துவிடாமல் இதில் கூறியுள்ள விஷயங்களைக் கவனத்தில் வைத்து அவற்றின்படி நடப்பார்களாயின் நற்பயனடைவார்கள். மூடத்தனமாய் நம்முன்னோர் ஆசார வழக்கங்களை யெல்லாம் பழிக்கும் புத்திசாலிகள் இதைக் கவனிப்பார்களாக.

பத்திரிகாசிரியர்.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(57-ம் பக்கத் தொடர்ச்சி.)

(29) துறத்த லாற்றுறு ஞானமாக் கடுகணைதொடர
அறத்த லாதுசெல் லாதுறல் லறிவுவந் தணுகப்
பிறத்த லாற்றுறு பேதமை பிணிப்புறத் தம்மை
மறத்த லாற்றுறு மாயையின் மாய்ந்ததம் மாயம்.

(இரா-வதை-124.)

இராமராவண யுத்தத்தில் இராவணன் மாயாஸ்திரமொன்றை யேவ, அது, சக்ரவர்த்தி திருக்குமாரனெய்த ஞானாஸ்திரத்தாலழிந்தது, என்பதைக் கூறுமிச் செய்யுளின் பொருளாவது: "நன்னெறியினின்று, பகவத் பக்திமேலீட்டாற் பரிசுத்தமடைந்த விடத்துத், தன்னையறிதலாகிய நல்லறிவு (சொரூபஞானம்) தோன்றியவளவில், பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தாற் பிணிக்கப்பட்டுச் சொரூபஞானத்தை யறியாவண்ணம் மறைத்துக்கொண்டிருக்கும் மாயையானது எங்ஙனமொழியுமோ அங்ஙனமொழிந்தது இராவணனேவப்பட்ட மாயவாளி." (எ-று.)

துன்பமே வடிவாகவுடைய பிறவிக்கேது அறியாமை. அது மெய்யை மெய்யென்றும் பொய்யைப் பொய்யென்று மறியாது; மெய்யைப் பொய் யென்றும் பொய்யை மெய்யென்றும் முரணுக்கருதலாகிய விபரீத ஞான மாம். "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும், மருளானும் மாணுப் பிறப்பு." என்றார் பொய்யாமொழியாரும்.

பாராதி பூதம் நீ யல்லை-உன்னிப்
பாரிந்தி ரியங் கரணம்நீ யல்லை
ஆரா யுணர்வு நீயென்றான்—ஐயன்
அன்பா யுரைத்தசொல் லானந்தந் தோழீ.

(சங்கர சங்கர சம்போ.)

என, ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளி யாங்கு, "மாயாகாரியமாகிய இந்திரியங்கள் கரணங்கள் வாயுக்கள் என் னும் தத்துவங்களனைத்தையும் தானல்லவென்று நியதிகழித்து, இவற்றை யாராய்ந்தறியு மதே தனதெதார்த்த சொரூபமென்று அபரோக்ஷமாயறி தலே மெய்ஞ்ஞானமாகும்." "தன்னையறிவதே அறிவாம், அஃதன்றிப் பின்னையறிவது பேயறிவாமே" என்றார் ஆன்றோர்.

திருக்குறள் மெய்யுணர்த லென்னு மதிகாரத்தில், "எப்பொரு ளெத் தன்மைத்தாயினு மப்பொருள்—மெய்ப்பொருள் காண் பதறிவு," என்று நாயனாரும், அதனுரையில், "சராசரமாகிய பொருள்களிலெல்லாம் உலகத் தார் கற்பித்துக்கொண்டு வழங்குகிற கற்பனைகளைக் கழித்து, நின்ற வுண் மையைக் காண்பதே மெய்யுணர்வு; அதாவது, அரசன் சேரமான் என்ற விடத்து, அரசனென்பதோர் சாதியும் சேரமான் என்பதோர் குடியும் கற் பனையாதலால் அக்கற்பனையைவிட்டு, அவனை நிலம் முதல் உயிரீறாகிய தத் துவங்களின் கூட்டமென்றறிந்து, அத்தத்துவங்களை நிலம் முதலாக அத னதன் காரணங்களி லொடுக்கிக்கொண்டுபோய் முடிவிலே காரணகாரிய மிரண்டுமில்லாமல் நிற்பதனையறிதலாம்." என்று ஆசிரியர் பரிமேலழக ரும் கூறியுள்ள மெய்யறிவின் லக்ஷணம் ஈண்டறியத்தக்கதாம்.

இம்மெய்ஞ்ஞானம் எதுவரை தோன்றாமலிருக்குமோ அதுவரை சம் ஸார க்லேசமும் மாயையும் நீங்குவதில்லை. அது நீங்காவிடத்தே பிறவி நீங்குவதின்று. இதனை

வாரா யென்மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச்சுற்றிப்
பேராத காலநேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந்தானே

என்னும் கைவல்ய பாசுரத்தானுமறியலாம்.

ஆதலின் ஸ்வ ஸ்வரூபத்தை யறிந்து அஞ்ஞானமாயையை யொழித்து பிறவிப் பெருங்கடற் பிழைத்துப் பேரின்ப வீடடையப் பிரயாசப்படுத லத்தியாவசியமென்னும் நீதி இச்செய்யுளாற் பெறப்படுகின் றது.

(30) துனையும் வேகத்தா லுருமேறுந் துண்ணென்ன
வனையுங் காலிற் செல்வன தன்னை மறவாதே
நினையும் ஞானக் கண்ணுடை யார்மேல் நினையாதார்
வினையம் போலச் சிந்தின வீரன் சரம்வெய்ய. (ஷை-129)

மாயாஸ்திரம் மாய்ந்ததைக்கண்ட தசகண்டன் சூலமொன்றினை விட, அதையொழிக்க வினகுலதிலகன் ஏவியவாளிகளியாவும் ஊறுசெய்யமாட்டாமல் அழிந்தன வென்பதைக் கூறுமிச்செய்யுளின் பொருள், "இடியுந் திடுக்கிடக் காற்றினுங் கடுகிச்சென்ற காகுத்தன் சரங்கள், இராவணன் சூலத்தை யொன்றுஞ் செய்யமாட்டாமல், பரந்தாமனது பாதபத்மங்களைப் பகலுமிரவும்பரவாநிற்கும் ஞானக்கண்களையுடைய பக்தோத்தமர்களைக் குறித்துச் சிலர் சிறிது மாலோசனையின்றிச் செய்யும் துஷ்கிருத்தியங்கள் அவரை யாதுஞ் செய்யவியலாது நிஷ்பிரயோஜனமாந்தன்மைபோல இற்றுவிழுந்தன" என்பதாம்.

இதனால், "பக்தபராதீனனாகிய பகவானிடத் தன்புபூண்டொழுகுமடியார் திறத்துச் சிறிதும் அபசாரமியற்றலாகாது. இயற்றினுமதனாலவர்க்கு யாதும் துன்பமுண்டாவதின்றெனினும், 'சுவரிலெறிந்த பந்தானது மீட்டுமடித்தோனையே யடையுமாப்போல்,' அத்தீமை தம்மைப்புரிந்தோர்மாட் டேகாதொழியாது. சமணரது துர்ப்போதனையாற் பல்லவராயன் புரிந்த தீக்காரியங்கள் வாகீசரைச் சிறிதும் வருத்தவில்லை யென்பது உலகறிந்ததேயன்றோ? கடவுள்மாட் டபசாரப்படினும் படலாம். அடியாரைப் பிழைப்போருய்யார் உய்யார்! இறைவர் தொண்டருள்ளத் தொடுக்கமாகலின் தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே.

* * * *

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோய ராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே."

"பாதியா யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையாய் என்பா ராகி
லவர்கண்டீர் யாம் வணங்கு மடிக ளாரே."

என்னுமின்னோரன்ன ஆப்த மொழிகளை யுணர்ந்து அடியாரிடத்து மிக்க அன்புபூண்டொழுகல்வேண்டும்" என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கக் கிடக்கின்றது.

(31) பாதமறைவெவ் வரவினுக்குப் பாலுநெய்யும் புகட்டிடினும்
வாதைசெய்யும் வல்விடமே வளருமாபோல் மனுநூலும்
வேதமனைவையோ ராயிரமும் விளங்குங் கலையுந் தசக்கிரிவன்
ஓதவோதப் போதங்கெட்ட போதமான தோங்கியதே.
(உத்தர-இரா-பிற-17.)

(இ-ள்.) இராவண கும்பகர்ணர் வித்யாப்யாசஞ் செய்யத்தொடங்கி அநேக வேதங்கள் கலைகள் மனுதர்ம சாஸ்திரம் முதலிய நூல்களைக் கற்றுவந்தனர். அவ்வாறு கற்கக் கற்க, உள்ளறிவுங்கெட்டு தீக்குணமானது மேலும் மேலும் விருத்தியாயிற்று; பாம்பிற்குப் பாலும் நெய்யும் ஊட்டினாலும் அதனிடத்து கொலைக்குரிய கொடிய விடமே பெருகுவது போல். (எ-று.)

கல்வி ஒருவரிடத்துள்ள இயற்கைக்குணத்தை வளர்க்குந்தன்மையுடையது. கூறிய வாளை யொப்பது. தக்க வழியிலுபயோகிக்கவறியான் கைவாள் இன்னலையேயன்றோ வென்றுமீயும்? கள்ளமனமுள்ளோன் கல்விகற்பின், கண்டோர் வியப்புறுமாறு திருடவும் கண்டுபிடிக்கப்படின் பலவித சாகசங்களால் யாவரையும் ஏமுறச்செய்து தப்பித்துக்கொள்ளவுமே யுபயோகிப்பா னக்கல்வியை. ஆனால் நற்குணமாகிய விளக்குச் சிறிதேனுமிருப்பின் அது கல்வியாகிய நெய்திரிகளால் பெருகிச் சுடர்விட்டுப் பிரகாசித்து, பேரிருளாகிய தீக்குணங்களைப் பற்றும். "நட்புந்தயையுங் கொடையும் பிறவிக்குணம்" "சங்கையறப் படித்தாலும் கேட்டாலும் பிறர்க்குறுதிதனைச் சொன்னாலும், அங்கணுலகிற் சிறியோர் தாமடங்கிநடந்து கதியடையமாட்டார்" என்றார் பெரியாரும்.

ஆகையால், கல்விகற்குங்காலத்தேதானே, 'நன்னூற்களையாராய்ந்து நன்னெறியிலொழுகவே கற்பது' என்னுங் கருத்தோடு கற்று, படித்தபடி நடக்க முயலவேண்டும். 'படித்தால்தானே பிழைக்கலாம்,' என்று வயிற்றுப்படிப்புப் படிக்கலாகாது. அக்கல்வி நம்மை நல்வழியினுய்க்காது என்னும் நீதியை யிப்பாட்டு ஊட்டுகின்றது. (தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

கம்பராமாயண விஷ.

ஐயன்மீர்!

ஸ்ரீயப்பதியாகிய கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதந, த்ரிவிக்ர, வாமந, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தமோதர வெனத் துவாதச நாமத்தோடியைந்த சகஸ்ரநாம மௌலிப் பெருமாளின் ராமாவதாரத்தை வான்மீகி ச்லோஹ சம்பூர்ணஞ் செய்த இக் கலியுகத்திற் சற்றேறக்குறைய 1000 வருஷங்களுக்கு முன்னர் வள்ளலாம் வெண்ணெயூர்ச் சடையன் புண்யவசத்தாற் கம்பராங் கவிச்சக்கிரவர்த்தியாரால் ராமாயண காவியம்பாடி ஸ்ரீரங்கம் பெரியகோவிலில் பிரமசமூக அரசவர்க்கக் கவிப்புலமைக்குழா முதலிய அரும்பெரிய சபாமத்தியிலரங்கியற்றுந் தருணமெத்துணைப் புலமைவாய்ந்த கவிவல்லுநர்களாற் சாற்றுகவி பெற்று அப்பாற்றன்மக னம்பிகாபதியிடம் சாற்றுகவிகேட்க, அம்பிகாபதி, அத்தனே! இக்காவியத்திலுங்களிஷ்டத்திற் குறியவர்கட்கு

வேண்மென பாடியிருக்கிறீர்கள். எனக்கிதிலென்ன ஆஸ்பதஞ் செய்திருக்கிறீர்களென வினவ, கவிச்சக்கிரவர்த்தி :—

பாலகாண்டம், திருவவதாரப்படலத்தில்

“ வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருதி வான்மிசை
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகடங் குறைக டரவே ”

எனவும், உண்டாட்டுப் படலத்தில்

“ வளையயின் முன்கையோர் மயில னுடனக்
கிளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணுவியே ”

எனவும், யுத்தகாண்டத்தில்

“ அண்ட மூலத்துக் கப்பா லாழியுங் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்பியென் றேவன் சென்னிப்
பண்டை நாளிருந்த கங்கை நங்கையும் பதைத்தாள் பார்ப்பான்
குண்டிகை யிருந்த நீருங் கோளகோள கொதித்த தன்றே ”

எனவும், மாயாசனகப்படலத்தில்

“ அண்டத் தளவு மினைய பகர்ந்த ழைத்துப்
பண்டைத் தன்னுமத்தின் காரணத்தைப் பாரித்தான்
தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர் பொடிப்பக்
கெண்டைத் தடங்கண் ணுளுள்ளே கிஞகிஞத்தாள் ”

எனவும், இந்நான்கு சந்தர்ப்பங்களில், சளசள, களகள, கோளகோள, கிஞகிஞ என்று பாடியிருப்பதை யறியவிலையாவென்க, அம்பிகாபதி, பரமானந்த மகிழ்வெய்தித் தாமுமோர் சாற்றுகவிகொடுக்க ஆங்குளவித்வ குலாதிபர் முதலிய யாவரும் பேருவப்புடன் கம்பரைக் கொண்டாடினரென இராமாயண வைபவ சங்கிரகங் கூறுகின்றது. நிற்க,

காப்பு முதற்கடையேடீராகப் பதவுரை, பொழிப்புரை, விரித்துரை, கருத்துரை, மேற்கோள் உபமானவுபமேயங்களோடு அன்று பாராயணித்துக் கதைக்குத் தக்கவாறொவ்வோரமயங்கட்கேற்பக் கூறிவருங்காற்றன் மகன் அம்பிகாபதியைப்பற்றி கியாபகங்கூட இல்லாது பிரசங்கமுடித்துப் பின் அரங்கியற்றுங்கால் மகன்கேட்ப இதை மேற்கண்டவாறு சுட்டிச் சொல்லியதின் கருத்தென்னவோ, அக்கருத்தையே அம்பிகாபதியும் உட்கொண்டு உவந்தான் என்ருல், மேற்கண்ட நான்கு பதங்களாகிய, சளசள, களகள, கோளகோள, கிஞகிஞ என்பதில் அம்பிகாபதியென்பதற்கென்ன ஆஸ்பதம் ஏற்பட்டுவிட்டதோ தெரிகிலேன்.

சுமார் 30 வருஷங்களாய் இதைப்பற்றி யான் அட்டாவதானிகள், தசாவதானிகள், கவிவலோர் முதலிய மாவித்வான்களனேகர்களிடம்

கேட்டதிற் கண்டமட்டும் மனம்போனபடி சொல்லி யொன்றை யொன்று பொருந்தாது முரண்பட்ட விபரங்களையே கூறினர். அவற்றை மீண்டி யானறைகுவனே லெழுதுகோரேற்கு மென்றாவது லிகிதந் தோற்கு மென்றாவது கூறுவதரிது.

அரியபெரிய தமிழ்ப்புலமைத் தலைவர்களானாலும், மற்றியாவர்களா னாலும் உலகம் நம்பும்படியான விடை யிதற்குக் காரணங்காட்டி யெழுது வீர்களாயின் அவர்களுபய சரணாரவிந்தங்களை யென் சிரமீது சூடிக்கொள் வேனென்றும் அப்படி யெழுதுவது சஞ்சிகை, பத்திரங்களில் தங்கள் முழு விலாசங்காட்டி யெழுதவேணுமென்றும் எழுதலானேன்.

K. கருப்பசாமி கவிராஜ், கர்னம்,
குமாரகிரி, தட்டப்பாறை போஸ்ட்டு.

சந்நியாசம்—சந்நியாசிபேதம்.

(65-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியும் நுனியும் சமனாயிருப்பதும், சமமான கணுக்களுள்ளதும், குற்றமற்ற பட்டைகளையுடையதும், சித்திரவர்ணம் (பலவர்ணம்) உள்ளதாயிருந்தாலும் காயங்களில்லாமலிருப்பதும், வண்டு முதலியவற்றால் துளை செய்யப்படாததும், கணுக்கள் கெட்டியாயிருப்பதும், தானாக முளைத்துப் பயிரானதும், தளர்ச்சியில்லாததும், கோணலில்லாததும், நல்லதுமான ஒரு மூங்கில் தடியைத் தண்டமாகக் கொள்ளவேண்டும். மூக்களவுள்ளதும், அல்லது தலை மூகளு இவற்றுக்கு மத்தியான புருவத்தள வுயரமுள்ளதாயிருக்கவேண்டும். இது யதிகளுக்குரிய தண்டமென்று புராணங் கூறுகின்றது. சிரத்தையுடையவர்களாற் கொடுக்கப்படுகிற தண்டத்தை யதிகள் பெறவேண்டுமென்பது ஸ்மிருதி. யதிகளுக்கு வீதிகள்தோறும் வஸ்திரம். (என்றால் கிருகஸ்தர்களால் எறியப்பட்ட கந்தை) பூமி முழுதும் படுக்குமிடமாயிருக்கின்றது. (என்றால் படுக்க வீடு கூடாதென்பது) ஆதலால் யதிகளுக்குத் துக்கம் நேரிடக் காரணமே யில்லையென்று தேவர் கூறினர்.

கித்தான், சணல் அல்லது தர்ப்பையினால் செய்த வஸ்திர முடுக்க வேண்டும். இவற்றை நற்குண நற்செய்கையுடைய நல்லவர்களிடத்தி லிருந்து பெறவேண்டும். பெறும்போது கொடுப்பவர்க்குச் சிறிதுகூடத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. ஆயினும் உடுத்துக்கொள்வதும் வஸ்திர மில்லாமலிருப்பதும் அவரவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது. சுகதுக்கங்களால் சரீரத்துக்குத் துன்பஞ் செய்துகொள்ளாம லிருக்கவேண்டும் என்றால் சுகதுக்கங்களைப் பாராட்டக்கூடாது. பிறர் செய்யும் ஸ்தோத்திரங்களால் மகிழ்ந்து அவர்களை வாழ்த்துவதும், நிந்தைகளால் வருந்தி அவர்களைச் சபிப்பதும் கூடாது. வேதாந்த புஸ்தகங்களை வேதவேதாந்

தங்களை யுணர்பவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். காசுவாங்கி புஸ்தகமெழுதுவதுகூடாது; அதனால் பெருந்தோஷம் நேரிடும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருநாளும், பெரிய நகரங்களில் ஐந்துநாளும் தங்கலாம். இவ்வாறு தங்கியிருப்பதை ஆஸநமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. சந்நியாசிகளுக்கு உரியனவென்று கூறப்பட்ட பாத்திர முதலியவற்றில் ஒன்றையாவது விலக்கியிருப்பது கூடாது. இல்லாதிருந்தால் அது பாத்திரலோபம் என்னும் தோஷத்தைத் தரும். தண்டம் முதலியவைகள் கையிலிருக்கும்போது வருங்காலத்தை உத்தேசித்துச் சேகரித்துக்கொள்வது ஸஞ்சயம் என்னப்படும். ஜனங்களிடத்தில் கருணையில்லாமல் தனக்கு ஊழியம் செய்வதையும், போஜனாதிகள் கொடுத்து உபசரிப்பதை உத்தேசித்தும் சிஷ்யர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் சங்கிரகமென்னப்படும். சகல விஷயங்களையும் விளக்கிக்காட்டுவதால் வித்தையைப் பகலென்றும், எல்லாவற்றையும் மறைப்பதால் அவித்தையை இரவு என்றும் அறிஞர் கூறுகின்றார்கள். வித்தியாப்பியாசத்துக்கு இடையூறு நேரிட்டால் அது "திவாஸ்வாப" எனப்படும். ஸர்வாந்திரியாமியான பரபிரமத்தின் சொரூபத்தை விளக்கும் வியவகாரங்களையே பேசவேண்டும். அதைவிட்டு நல்லபோஜனமளித்தான், நல்லபிக்ஷை செய்வித்தான் என்று ஒருவனைப் புகழ்வதும், அந்தப்போஜனத்தை விரும்பி அவனுக்கு அனுக்கிரகம் செய்வதுங்கூடாது. அது "விருதாஜல்பம்" என்னப்படும். யதிகள் அடிக்கடி படிப்பதும், சிரவணம் செய்வதும் அவசியமன்று. அவனுக்கு விதிக்கப்பட்ட தர்மங்களை விடாமல் அனுஷ்டிப்பதினாலேமாத்திரம் யதியாவான். மேலும் மேலும் படிப்பதினால் யதியாவதில்லை. ஆனால் உபநிஷத்துக்களைமாத்திரம் படித்தும் ஆவர்த்திசெய்தும் வரவேண்டும். தீர்த்தசேவை, உபவாசம், அத்தியயனம் செய்தல், வியாக்கியானங்களைப் படித்தல் இவற்றில் பற்றுதல்வைப்பது கூடாது. உண்மை கூறுதல், நியாயமில்லாததை விலக்கிவிடுவது, பிரமசர்யானுஷ்டானம், நல்லெண்ணம், சிவபக்தி, விஷ்ணுபக்தி, மனச்சந்தோஷம், சௌசம், ஆஸ்திகம் பிரமவிசாரம், எல்லாவற்றையும் சமனாய்ப் பார்ப்பது, படபடப்பில்லாமலிருத்தல், மனச்சமாதானம், மனத்தைரியம், பற்றற்றிருத்தல், குருபணிவிடை, சாந்தி, பிறவிந்திரியஅடக்கம், மனவடக்கம், எல்லாவற்றிலும் உபேக்ஷை, நிர்ணயம், அழகானவசனம், பொறுமை, தயை, லஜ்ஜை, அறிவு, சாஸ்திரஞானம், யோகப்பயிற்சி, பிக்ஷாடனம், ஜபம், சந்தியாகால அனுஷ்டானம், கருமபலனைவிட்டொழிப்பது ஆகிய இவை நியமத்துடன் கூடின யதிதர்மமாம். பரமஹம்ஸனாயிருப்பவர் தொந்தங்களை யொழித்து, ஸத்துவத்திலிருந்து எல்லாவற்றையும் சமமாய்ப் பாவிப்பதே தர்மமாகக் கொள்வர். இவர் ஸ்ரீமந்நாராயணருக்குச் சமானமாவார். பிரபஞ்சங்களை வெறுத்து ஞானாக்கினியால் எல்லாவற்றையும் தகித்து அக்கினியைத் தனக்குள் ஒடுக்கிக்கொள்கிறவனே அக்கினிஹோத்திரி என்னப்படுவான். மற்றவன் அக்கினிஹோத்திரியாவதில்லை. முந்தின மூன்று ஆச்

சிரமங்களை விட்டுச் சந்நியாசத்தை யடைந்தவன் ஒருவருஷம் குருபணி விடை செய்துகொண் டிருக்கவேண்டும். பின்பு அவருடைய உத்தரவு கிடைத்தால் தனியாகப் பிரிந்துவரலாம். மழைகாலமாகிய நான்கு மாதங்கள் ஒரு இடத்தில் தங்கியிருப்பது சந்நியாசிக்குக் குற்றமாகாது.

உஷக்காலத்திலெழுந்து முறைப்படி சௌசம் செய்து பல்விளக்கி விதிப்படி ஸ்நானம் செய்து, சந்தியோபாசனை முடித்துப் பிரணவஜபம் செய்யவேண்டும். மரத்தடி அல்லது நதிக்கரை இவ்விடங்களில் வசிக்க வேண்டும். பிக்ஷாகாலத்தில் ஏதேனுமோர் கிராமஞ்சென்று பிக்ஷை யெடுக்கவேண்டும். ஒரு பொருளையும் சம்பாதித்து வைத்துக்கொள்ளக் கூடாது. எல்லாவற்றிலும் உபேட்சையா யிருக்கவேண்டும். பொய் பேசாமை, ஜீவஹிம்சை செய்யாமை, திருடாமை, ஸ்திரீசங்கமமற்றிருப்பது, வைராக்கியம் ஆகிய இவ்வைந்தும் அவர்களுக்கு உப விரதங்களாம். கோபமின்மை, குருபணிவிடை, ஜாக்கிரதையாயிருப்பது, சௌசம், ஆகார சுத்தி இவ்வைந்துங்கூட உப விரதங்களெனக் கூறப்பட்டுள்ளன. காமக் குரோதங்கள் கிரகஸ்ததர்மமாம். லோபமோகங்களை யொழித்திருப்பது சந்நியாசதருமமாம். இஷ்டமானதைப் புஜித்துவிடுவதால், நெய்யினால் நெருப்பு விருத்தியாவதுபோல ஆசை விருத்தியாகுமேயன்றிக் குறைவதில்லை. விஷயங்களைப் புஜிப்பவன், அவைகளை விட்டொழித்தவன் இவ்விருவரில் விஷயத்தை விட்டவன் பரமசுகத்தைப் பெறுவான். வஸ்துக்களின் குற்றங்களையும் சரீர தோஷத்தையுந் தெரிந்துகொண்டவன் ஆசையை எளிதில் ஒழிப்பான். வாக்குமனங்களை அடக்கினவன் வேதாந்தத்தாலுண்டாகும் பூர்ண பலனைப் பெறுவான். சன்மானம் பெறுவதில் வெறுப்படையவேண்டும். அவமானத்தை அமிர்தம்போல மகிழ்ந்தேற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால் அவமானம் பெறுவதால் நல்ல நடக்கை கெட்ட நடக்கைகளைத் தெரிந்து வழிப்படலாம். அவமானஞ் செய்தவன் அழிந்துவிடுவான். தர்மம், அர்த்தம், காமம், தர்மார்த்தம், அர்த்தகாமம், தர்மகாமம், தர்மார்த்தகாமம் ஆகிய இவ்வேழையும் அடுத்த ஏழுலகங்களின் காரியங்கள் எல்லாம் அநித்தியம். ஆகையால் அவ்வநித்தியங்களைப்பற்றிய விஷயங்களைப்பற்றிப் பேசக்கூடாது. இந்திரியங்களை யடக்கல், இராகத்துவேஷங்களை விடுதல், ஜீவாத்மாக்களுக்குத் துன்பஞ் செய்யாமையாகிய இவற்றால் ஒருவன் மோட்சத்தை யடைகிறான். துர்க்கர்மம் நரகத்தில் அமிழ்த்துகின்றது. வேண்டியவர்களைத் தள்ளி வேண்டாதவர்களுடன் கூட்டிவைக்கின்றது; மூப்பினால் மெலிவிக்கின்றது; வியாதிகளால் வருத்துகின்றது; நல்ல குலத்திற் பிறந்த ஜீவாத்மாவை நாய் நரி முதலிய இழிந்த பிறவிகளில் தள்ளிவிடுகின்றது. சரீரம் படைத்தவர் தர்மத்தினால் மோட்சத்தையும், அதர்மத்தால் நரகத்தையும் அடைகிறார்களென்பதை ஸந்நியாசி நினைக்கவேண்டும். யோகமுயற்சியால் நேரிடும் கதிகளையறிந்து எவ்வகையிலும் தன் தொழிலில் தவறுதல் வராமல் நடந்துகொள்ளவேண்டும். பிரமோ பாஸகர்கள் தங்கள்

தேகத்தை விட்டு மோட்சத்தையடைகிறார்கள். இச்சரீரத்தை யெடுக்கும் படி செய்வித்த கன்மம் அனுபவித்தாலன்றி நீங்குவதில்லை. நதியின் கரையோரத்திலிருக்கிற மரம் தன்வசம் கெட்டு நதிவேகத்தால் கரையை விட்டுவிடுவதுபோல கர்மத்தினால் இச்சரீரத்தை விட்டு மறு சரீரத்தை யடைகிறான். (தொடரும்.)

சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

உரை நடை அல்லது வசன நடை.
(Prose Style.)

நடை : மனதில் உதிப்பதை மரபியல் வழாமல் அனைவரும் எளிதில் உணருமாறு வாயான் மொழிந்தும் வரைந்தும் வெளியாக்குவது.

நடைக்குண்டாதும் மேன்மைக்கு ஏது : எழுதுவோனது கல்வி நலம் கொள்கை நலம்.

உரைவகை : 1. செறித்துரை, 2. விரித்துரை, 3. அணிநதுரை.

நல்ல நடைக்குள்ளன : 1. தெளிவு, 2. ஆற்றல், 3. இசை.

1. தெளிவு.

தெளிவு நடை : நாம் வழங்கும் சொற்களும், சொற்றொடர்களும், வாக்கியங்களும் நமது கருத்துக்களைப் பிறர் வித்தியாசமாகக் கொள்ளாமல் இருக்கும்படி திருத்தமாயும், நேர்மையாயும் வெளியிட்டுரைப்பது.

மேலும், பொருள் வெளிப்படையா யிருக்கவேண்டியதே யொழிய, கொள்கை முதலானவைகள் யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்கனவா யிருக்கவேண்டுமென்பது கருத்தல்ல. மற்றும், சாமானிய மாந்தர்களுக்கும் நன்கு விளங்குமாறு பொருள்கள் அமைந்திருப்பதுதான் தெளிவான நடை என்பதற்கு ஓர் அடையாளம்.

ஒருவர் நடை வேறொருவருக்குப் பயன்படாமை :

(a) சிலர்க்குத் தெளிவாயிருப்பது வேறு சிலர்க்குத் தெளிவா யிராமை.

(b) கற்றோர்க் கென்றெழுதிய நடையானது சாமானிய சனங்களுக்குப் பயன்படாமை.

(c) நியாய வாதியால் அறியப்படும் நடை, வைத்தியனால் அறியப் படாமை.

(d) சிறுவர்க்கான நடை பெரியோர்க் காகாமை.

1. சொற்கள் :

(A) ஆன்றோர்கள் ஆட்சிபெற்ற சொற்களையே வழங்குவது ஓர் வழக்கமாயினும், 'புதியன புகுதல்' என்ற ஞாயப்படி ஏற்ற ஆக்க மொழிகளைப் பிறரும் அங்கீகரிக்கத்தக்கவாறு வேண்டியமட்டில் வழங்கலாகும்

ஏனெனில், எந்தப் பாஷைகட்கும், எக்காலத்தும் நிலை மாறுபடல் இயற்கையாதலினாலும், நாளுக்கு நாள் மாந்தர்கட்குப் புதுப்புது விஷயங்கள் அவரவர் அறிவினுக்குத் தக்கவாறு புலப்படுவதனாலும், மற்றும், கடைவீதியில் நாம் காணாத கொள்ளாத பல பொருள்கள் புதிது புதிதாகக் காணப்படுந்தோறும், அவற்றை நம்முடைய உபயோகத்துக்குத் தக்கவாறு எடுத்தாள அங்கீகரித்துக்கொள்வதுபோல், புதிய புதிய வார்த்தைகளைப் பொருளுக்கேற்க அமைத்துக்கொள்வது வழுவாகா.

உதாரணம் :—எலக்ட்ரிக் ட்ராம் வண்டி என்றுரைப்பதைப் பார்க்கிலும், மின்சார வண்டி என்று சொல்லுதல் தவறாகாதாம்.

(B) செந்தமிழ் நடையில் தள்ளுவன:—(செந்தமிழ்=கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் விளங்கக்கூடிய தமிழ்.)

1. திசைச் சொற்களை வழங்காமை.

உதாரணம் :—செப்பு என்பதிலும் சொல் எனலே மேன்மை. கேட்வாசற்படி, ஷாப்புக்கடை, வக்கீல் என்று வழங்குதலைத் தவிர்த்து, வாசற்படி, கடை, நியாயவாதி என வழங்கல்வேண்டும்.

2. வடமொழிப் பதங்களை இன்றியமையாத வழியன்றி வழங்குதலைத் தவிர்க்க.

உதாரணம் :—மானமிலான் என்பதற்கு விமானி எனலாகாது.

3. சாமானிய வழக்குச் சொற்களைக் கட்டுரையி லெழுதுதல் சிறப்பின்மையால், அதைத் தவிர்க்க.

உதாரணம் :—ஒத்துமை என்பதினும் ஒற்றுமை என்னல் மேன்மையாம். (சாமானிய வழக்கு=Colloquial Words.)

4. குறியீட்டு மொழிகள் (=Technical Words) சாதாரண நடையில் வழங்குதலையும், செய்யுள் விகாரங்களைச் செவிக்கின்பம் தோன்றுமிடத்தன்றி வசன நடையில் உபயோகித்தலையும் தவிர்க்க.

2. சொற்றொடர்களில் தவிர்க்க வேண்டுவன :—

1. ஒரே சொற்றொடரை அடிக்கடி கூறுதல்.

2. ஒரு மொழியை விளக்குமிடத்து, அதே மொழியின் திரிபுகளை உபயோகித்தல்.

3. ஒரே சொற்றொடர், சிலசமயங்களில் சொல்லப்புகும் விஷயத்தை வலியுறுத்திக் காட்டுவதா யிருப்பினும், அதனையே அடிக்கடி வழங்குதலையொழிக்க.

4. வடநூன் முடிபுகளை ஆன்றோராட்சியின்றித் தமிழிற் பெய்தலைத் தவிர்க்க.

தவிர்க்கவேண்டுவனவற்றைத் தவிர்க்காவிடின், அதனாலுண்டாம் பயன்கள் வருமாறு :—

(a) மயக்கத்துக் கிடனுதல்.

(b) வேறு சில வேளைகளில் மாறுன பொருளுண்டாதல்.

(c) பல சொற்றொடர்கொண்ட வாக்கியத்தின்கண்ணே முடி பிலக்கணத்தை யாவரும் உற்று நோக்கவரும். அங்ஙனம் உற்று நோக்காமற்போனுல், எண்மயக்கம், பான்மயக்கம் இவைபோல்வன பிறவும் வாக்கியத்தில் நடைபெறலாகும்.

உதாரணம்.—'அவன் அப்படிச் சொல்பவ னல்ல' என்று அனேகர் கவனியாமலே உபயோகிப்பர். கவனித்தால் 'அல்லன்' என உபயோ கிக்கக்கடவர்.

3. வாக்கியங்கள்.—

1. தனி வாக்கியம்(=Simple Sentence.)
2. கலப்பு அல்லது சங்கர வாக்கியம்(=Complex Sentence.)
3. தொடர் வாக்கியம்(=Compound Sentence.)

(a) தனிவாக்கியம்:— ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் உடையது.

(b) கலப்புவாக்கியம் :— தனிவாக்கியத்தை அடுத்துவரும் சில அடைவாக்கியங்கள்.

(c) தொடர்வாக்கியம் :— இரண்டு மூன்று தனி வாக்கியங்களுடன் கலந்து வரும் அடைவாக்கியங்கள்.

இம்முத்திற வாக்கியங்களும் கட்டுரையில் விரவியே வரத்தக்கன. ஆனுல் தனிவாக்கியங்கள் மிகுந்திருப்பின் உரை நடைக்கு மிகுதியான ஆற்றலுண்டாம். ஆற்றலெனினும் ஆண்மையெனினும் ஒன்றே.

தவிரவும், முற்றியல்வாக்கியம், நெகிழியல் வாக்கியம் என மேலும் இரண்டு கூறுவர்.

1. முற்றியல் வாக்கியம் :— வாக்கியத்தி னிறுதிவரை படித்தபின்னர் பொருள் விளங்குவது.

2. நெகிழியல் வாக்கியம் :— பல சிறு வாக்கியங்கள் ஒரே வாக்கியமாக அமைதல்.

உதாரணம் :—முற்றியல் வாக்கியம் :— அருமையான ஒரு நூலைப் படிக்குந்தோறும் புதிய நலங்கள் புலப்படுவதுபோல, பழகுந்தோறும் இருவர்க்கும் மகிழ்ச்சியுண்டாக்குவதே நட்பு.

நெகிழியல் வாக்கியம் :— சில நண்பர்களிடத்து நாம் கிரகிக்கவேண்டிய பொருள்கள் ஒன்றுமில்லாவிடினும், அவர்கள் நம்மைக் கேட்கும் கேள்விகளால் நம் புத்தி தூண்டப்படுகின்றது.

ஷை இரண்டு வாக்கியங்களும் ஒரு கட்டுரையின்கண் கலந்துவருதலே சிறப்பாம். ஒரே விதமான நடை அத்துணைச் சிறப்பைத் தருவதின்று.

II. ஆற்றல் (ஆண்மை.)

பொருளை உற்று நோக்கச் செய்வதும், மனத்திற்பொருந்தச் செய்வதும், மனோபாவத்தைத் தூண்டச்செய்வதும், உணர்ச்சியை எழுப்பச் செய்வதும் ஆகிய இந்நான்கையும் அடைவிப்பது ஆற்றல் நடையாம். அடைந்தால்தான் நடைக்கு ஆண்மைத் தத்துவமாம்.

'இத்தகைய நடையாண்மையில் சொல்வழக்கு, சொற்பல்காமை, சொல்லமைப்பு என்பன பெறப்படும்.

சொல்வழக்கு :— பொதுச்சொல்லை உபயோகிப்பதைப் பார்க்கிலும், சிறப்புச்சொல்லை உபயோகிப்பதுதான் சிறப்பாம்.

உதாரணம் :—" தண்ணீரிலிட்ட ஈயக்கலம்போல, அவர்கள் ஆற்றில் மூழ்கியாழ்ந்தனர் " என்றவிடத்தில், ஓர் உலோகத்தைத் தண்ணீரிலிட்டாற்போல் ஆற்றில் மூழ்கியாழ்ந்தனர் என்றால் அது மனவெழுச்சியைத் தராது.

" அத்தகைய விடத்தை இக்கண்களும் பார்த்திருக்கின்றன" என்னுமிடத்தில், அத்தகைய விடத்தை யடைந்தவர் பார்த்தலாகும் என்பது அத்துணைச் சிறப்பன்று.

வடமொழிக்கண் பிரதாப ருத்ரீயம் என்னும் அலங்கார நூலெழுதிய வித்திய நாதன், தன்நூலை 'முதன்மகள்' என்று புனைந்து அரயனிடத்துக் கூறினான். அதுபோல என்றும், எங்கும், அணிநலம் விளங்க உரைப்பது மேன்மையாம்.

சொற்பல்காமை :— ஒரு விஷயத்தை எவ்வளவு குறைந்த சொற்களை உபயோகித்து விளக்கலாகுமோ அவ்வளவு சொற்களை உபயோகித்தால், அவ்வளவுக்கும் உரை நடை மேன்மையுறும். வாக்கியச் சிறுமைளைக் கருதிப் பொருளை மாத்திரம் சிதைக்கலாகாது.

" சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி யறிந்து " என்றார் ஆசாரக் கோவையார்.

மேலும், ஒரு பொருளைத் தெரிவிக்கப் பல சொற்களை உபயோகித்தலும் பயனில்லை. சந்தர்ப்பத்தால் உய்த்துணரும் வண்ணம் எழுவாயைப் பன்முறையும் காட்டாமல் எழுதலாகாது.

சொல்லமைப்பு : நன்கு விளங்க வுரைக்க வேண்டுமானால், எழுவாயை முதலிலும், பயனிலையை இறுதியிலும், அடைமொழிகளை இடையிலுமே வைத்து ஒரு வாக்கியத்தை உண்டுபண்ணவேண்டும்.

சில சமயங்களில் இவ்வொழுங்கை மாற்றவேண்டியும் வரும்.

வாக்கியத்தை வேறு வகையாக மாற்றவேண்டுமாயின், அதற்குத் தக்க பயனிருக்கவேண்டும்.

சில இடங்களில் ஒரு விஷயத்தைக் கூறி மறுப்பதும், மாறுதலான விஷயங்களைத் தொடுத்துக் கூறுதலும் உரைநடைக்கு மிக்க அழகுண்டாக்குவனவாம்.

இவையாவும் சொன்முரணாலும், பொருண் முரணாலும் பெறப்படும்.

உதாரணம் :—(a) சொன்முரண் :—"சிநேகம் ஒரிடத்திலேயே இராமற்போனாலும் இருக்கின்றார்கள் ;" "வறியர்களேனும் செல்வர்கள் ;" "வலியிலாரேனும் வலியுளார் ;" "இறந்தார்களேனும் உயிருள்ளவர்கள்."

(b) பொருண் முரண் :— "அசுரர்கள் தேவர்களைச் சேரணிக்க முடியாமையினாலோ, பிராமணர்கள் அற்றைநாட்களிற் செய்யுங் கிரியைகளினாலோ, அசுரர்தம் இரக்கத்தினாலோ அச்சந்திரர் சூரியர் மீட்டும் உமிழப் பெறுகின்றனர்."

சில சமயங்களில், சாதாரணமாகக் கூறக்கூடிய விஷயங்களை வினா விடையி லுரைப்போமானால் ஆண்மை மிக்கு உண்டாகும்.

உதாரணமாக :— உயிரினுஞ் சிறந்தது உலகத் தென்னுளது ? அவ்வுயிரைப் பெற்று அடையும் பெரும்பயன் யாது?

"இன்ப வாழ்க்கையே யன்றோ?" என்பதே, உயிரினுஞ் சிறந்தது உலகத்தி லொன்றுமில்லை ; அவ்வுயிரைப்பெற்று அடையும் பெரும்பயன் இன்பவாழ்க்கையே யாம் என்பதினும் நடை நலத்தைப் பயக்கின்றது.

III. இசை.

வாக்கியத்தைப் படிக்கும்போது மெதுவாக ஓடும் அருவி, கரையிற் பரந்து கிடக்கும் பருக்கைக் கற்களோடு மோதுண்டு, இனிய கீதம் செய்வதையொப்பத் தோன்றவேண்டும்.

தெளிவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு இசையும் அவசியம்.

இசை நலம் உண்டாவதற்கு, இன்ன மாதிரிதான் எழுதுவதென்று வரையாதல், விதியாதல் இயலாது. அஃது, எழுதுவோனது உணர்ச்சி, ஆற்றல் இவற்றைப் பற்றியது.

தெளிவு, சொற்பல்காமை, இசையாகிய இம்மூன்றையும் கவனித்து எழுதினால் கட்டுரைச்சுவை எழுதலாகும்.

தனித்தனி விஷயங்களைத் தனியான பிரிவுகளி (Paragraphs) லமைத்தே எழுதவேண்டும். எல்லா விஷயங்களையும் மனத்திற்குத் தோன்றியபடி ஒரே தொடராக எழுதினால் தெளிவினைப் பொருந்தமாட்டாது.

கட்டுரை வகுக்கும் விதம்.

ஒரு விஷயத்தைக் குறித்துக் குறித்த காலத்தில் நன்கு எழுதி முடிக்கவேண்டுமானால், முதன் முதல் எச்செந்த 'விஷயங்களைப்பற்றி இக்கட்டுரையின்கண் எழுதவேண்டுமென்பதை ஆலோசிக்கவும்.

அங்ஙனம் யோசித்தபின்னர், அவைகளை ஒரு துண்டுக் கடிதத்தில் குறித்துக்கொள்ளவேண்டும்.

பிறகு அவ்வவ் விஷயங்களுக்குத் தனித்தனி ஒவ்வொரு பிரிவாகப் பகுத்து எழுதினால் மாணவர் முதல் எத்திறத்தினரும் திருப்தியடைவதுடன் எவரும் சந்தோஷ மெய்துவர்.

அத்துடன் கையெழுத்தும் நன்றாயிருத்தல் அவசியம்.

சுகவனம்-சிவப்பிரகாசன்,

தமிழ்ப் பண்டிதர், ஆத்தூர்.

மறுபிறப்பு.

கர்மத்தினுல் நமக்கு இப்பிறவி வந்திருக்கிறது. இப்பிறப்பில் செய்யும் கர்மத்தால் மறு பிறப்பை யடைகிறோம். இப்படி நாம் அனுதி தொடங்கி எடுத்த ஜன்மங்களுக் கோரளவில்லை. கர்மத்திற்குத் தக்கபடி நால் வகை யோனிகளில்* எழுவகைப் பிறவிகளை† மாறிமாறி யடைந்துகொண்டிருக்கிறோம். இம்மானிட ஜன்மத்தில்தான் பிறவியை யொழித்துக் கொண்டு முத்தியையடையலாகும். அதனுல்தான் இம்மானிட ஜன்மம் கிடைப்பது அரிது என்று ஆன்றோர் கூறினர். இதுதான் நமது மதச் சித்தாந்தம். ஆன்மாவாகிய தன் நிஜ சொரூபத்தைக் கண்டு பரமான்மாவில் இரண்டறக் கலந்துவிடுவதுதான் முத்தி.

இசசித்தாந்தம் ஒன்றே உலகிலுள்ள சகல பிராணிகளின் சுகதுக்கம், நன்மை தீமைகளின் வித்தியாசங்களுக்குத் தக்க காரணத்தை வெளியிடுகிறது. இன்றேல் ஒருவன் அழகுடையவனுகவும் ஒருவன் அவலட்சணமுடையவனுகவும், ஒருவன் செல்வவந்தன் மகனுகவும், ஒருவன் பிச்சைக்காரன் மகனுகவும் பிறந்திருப்பதற்கு நியாயமில்லை. வேறு எக்காரணம் பார்த்தாலும் பொருந்தாதாதலின் கடவுள் பாரபட்சமுடையவரென்றுவது, ஒருநெறியின்றி கண்மூடித்தனமாய் சிருஷ்டிப்பவரென்றுவது ஒப்ப வேண்டிநேரிடும். அவ்வாறுள்ள இதர காரணங்களைக் கூறி விவகரிக்க இங்கு இடம் போதாது. மேலும் அது அனுவசியம். எனெனில் அத்தகைய காரணங்களனைத்தும் முன்னமே பல நூல்களில் எடுத்துக் கூறிக் கண்டிக்கப்பட்டு முன்பின் பிறவி யுண்டென்பது மறுக்கமுடியாத விதமாய் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இச்சித்தாந்தமே ஆன்மா பரமான்மாவைப்போல் நித்தியம் என்பதை நிரூபிக்கிறது. எது முக்காலத்திலுமுளதோ அதுவே நித்தியம் எனப்படும். இடையில் உண்டாக்கப்பட்டது, முன்னில்லையாதலின், நித்தியமாகாது.

சென்மாந்த ரஞ்செய்த வினைகளுட றருமெனித்
செல்கால மிவனுண் டலோ
கன்மாநு பவநரக சொற்கமெனில் வருகின்ற
காலத்து மிவனுண் டலோ
உன்மாத யாதனு வுடல்கடவு ளுடல்மருட
வுடன்மாறி மாறி யழியும்
தன்மாய வுடல்கெடினு மிவனிருப் பதுகொண்டு
சத்தென்ப தொக்கு மகனே. (கைவல்யம்)

கிருஸ்தவ மதத்தின்படி ஒரே பிறப்புதான் உண்டென்பது அவர்கள் கொள்கை. அம்மதஸ்தர்கள் ஒவ்வாத காரணங்களைக் கூறி நம்மவரில்

---

* (1) சராயுஜம், (2) அண்டஜம், (3) உற்பிஜம், (4) சுவேதஜம்.

† 1. தேவர், 2. மனிதர், 3. விலங்கு, 4. பக்ஷி, 5. ஊர்வன, 6. நீர் வாழ்வன, 7. தாபரம்.

பாமரர்முன் மறுஜனனத்தை மறுத்துக்கூறுவது வழக்கம். நமது நூல்களில் எங்கேனும் ஒரு பாடல் வெளித்தோற்றத்திற்கு அவர்கள் தவறான கொள்கைக்கு ஒத்திருப்பதுபோல் தோன்றின், இந்துக்கள் நூல்களிலேயே யப்படி கூறியிருக்கிறது என்று பிரஸ்தாபிப்பது அவர்கள் வழக்கம். இவர்கள் அந்நூலில் முன்பின் விஷயத்தை விட்டுவிட்டு வெளிக்கு மாறாகத் தோன்றுவதை மட்டும் ஆதாரமாக எடுத்துக் கூறுவார்கள்.

ஒரு கிருஸ்தவர் நாயனார் கூறிய

(1) "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு" என்ற குறளையும்,

(2) "உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" என்ற குறளையும்,

மறு பிறப்பில்லை என்று அவர் கூறியதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்.

பேஷ் இவர் அறிந்துகொண்ட அர்த்தம் மிக நேர்த்தியே.

1-வது குறளின் அர்த்தம்:—"சத்தாகவும் நித்தியமாகவும் உள்ள உயிரும், ஜடமும் அநித்தியமுமாகிய தேகமும் கருவில் ஒன்றாக அமைந்திருப்பினும், வினையினால் சம்பந்தப்பட்டதேயன்றி உண்மையில் தம்முள் மாறுதலின், வினை யொழிந்ததே உயிர் உடலை அதிருக்குமிடத்தில் விட்டுப் போய்விடும்" என்பதாம். அதற்குத் திருட்டாந்தமாக முட்டையையும் அதற்குள்ளிருந்து வெளிப்படும் பறவையையும் கூறினார்.

2-வது குறளின் அர்த்தம். "நாம் தினம் நித்திரைபோய் மறுபடி விழித்துக்கொள்கிறோம். இந்த உறங்குதலும் விழித்தலும் எப்படி உயிர்கட்கு இயல்பாய் அடிக்கடி மாறிமாறி வருகின்றனவோ, அதுபோல் மரணமும் பிறப்பும் மாறிமாறி வந்துகொண்டிருக்கும்" என்பதேயாகும்.

மூடத்தனமாய் இக்குறள்களை மறுபிறப்பில்லை யென்பதற்கு ஆதாரமாய்க் கூறுவோர் நாயனாருளிய கீழ்க்கண்ட குறள்களை யுணர்ந்திலர் போலும்,

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்"

(பொருள்) அகப்பற்று புறப்பற்றாகிய இருவகைப் பற்றுக்களும் ஒழிந்தால்தான் பிறப்பொழியும்—அப்பற்றுக்களொழியாவிடின் பிறந்திறந்துழல்வதாகிய நிலையாமை காணப்படும்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

(பொருள்) இம்மானிட ஜென்மத்தில் ஆசானனுக்கிரகித்த உபதேச மொழிகளின் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் மறுபடி பிறவியடையாத நெறியை யடைவார்.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவா அப் பிறப்பீனும் வித்து"

(பொருள்) இச்சையென்பது எல்லா வுயிர்களுக்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்தாகும்.

இதை நிரூபிக்க நமது நூல்களிலிருந்து இன்னும் ஆதாரங்களை நாம் காட்டுவது அனாவசியம். இந்த அற்பகால வாழ்வையுடைய ஒரே ஜன்மத்தில் மனிதனைச் சோதித்து அதோடு நித்திய மோக்ஷமோ நித்திய எரிநரகமோ சேர்த்துவிடுவதாயின் அத்தகைய கடவுளும் ஒரு கருணையுடைய கடவுளாகுமோ—பிறந்து ஒருநாள் அல்லது சில நாட்கள் அல்லது நான் கைந்து வருடங்களுக்குள் இறந்துபோகிறவர்களைக் கடவுள் மோக்ஷத்திற் கனுப்புவாரா அல்லது நரகத்திற் கனுப்புவாரா? இதற்குப் பதில் கூறுவது அவருக்கே திண்டாட்டந்தான். முன்பின் பிறவியுண்டென்ற ஒரு உண்மையே இதற்குத் திருப்தியான சமாதானத்தை யளிக்கும். இது முன்னமே எவராலும் மறுக்கமுடியாதவிதமாய் நம் முன்னோரால் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனாற்றான், அமெரிகாவில் கூடிய சர்வமத சங்கத்தில் சுவாமி விவேகானந்தர் இதே கர்மம் மறுபிறப்பு என்பதை நிரூபித்து நிலைநாட்டி யிருக்கிறார்.

முன் பிறப்பிருந்தால் ஏன் ஒருவருக்கும் நினைப்பில்லை? என்ற ஒரு கேள்வி பிறந்தது. அதற்குச் சுவாமிகள் உண்மையான சமாதானமே கூறினார். அதாவது,

"நாம் நேற்று என்ன ஆகாரம் புசித்தோமென்பது சற்று சிந்தித்தால் தான் நினைவிற்கு வருகிறது. தடாகத்தில் இருக்கும் ஜலத்தின் மேல்பாகம் காற்றால் அலையுண்டுகொண் டிருக்கும்போது அதன் அடியில் இருக்கும் பொருள்கள் நம் கண்களுக்குப் புலப்படா. ஜலம் தெளிவாய் அசைவற்று நின்றால் அவை தெரியும். அதுபோல் மனமாகிய கடலில் பூர்வ ஜன்ம சம்ஸ்காரங்களனைத்தும் படிந்துகிடக்கின்றன. மனதின் அலைவையறுத்து அதில் ஆழ்ந்து நோக்கினால் கட்டாயம் பூர்வஜன்ம விஷயங்கள் புலனாகும்" என்றார்.

நம் முன்னோரில் பலர் தங்கள் முன்ஜன்ம விஷயங்களை யறிந்து கொண் டிருக்கிறார்கள். அவர்கள் எதையும் பிரத்தியட்ச அனுபவமா யறிந்தபின்பே கூறினவர்கள். இது சத்தியம். சிலர் தாங்கள் இச்சன் மத்தில் சாயுச்சிய முத்தியடைவதில்லையென்றும், மறுஜன்மத்தில் இன்ன இடத்தில் பிறக்கப்போவதாகவும், ஆன்மா நீங்கும்போது கூறியிருக்கிறார்கள். சீடர்கள் அவ்வாறே அந்த இடம் சென்று பிறந்த குழந்தையின் வாய்ப்பிறப்பைக்கேட்டு உண்மையை யுணர்ந்திருக்கிறார்கள். எங்கோ ஒவ்வொருவர்க்குப் பூர்வ ஜன்மத்தில் செய்திருந்த சாதனாபலத்தால் முன் ஜன்மத்தின் விஷயங்கள் மனதில் உதிப்பதுமுண்டு.

இப்போது அத்தகைய அத்தாட்சி யொன்றிருக்கிறது. வடக்கிலுள்ள அல்வார் நாட்டிலிருக்கும் ஸ்ரீமான் இராய்பகதூர் ஷியாம் சுந்தர் லால், C. I. E., (Rao Bahadur Shiam Sunder Lal, C. I. E., Alwar)

என்பவர் அனேக வருடங்களாக முன் பிறப்பைப்பற்றிய சங்கதியை யறிந்துகொள்ளக்கூடியவர்கள் யாரேனு மிருக்கிறார்களா என்று ஆராய்ச்சி செய்து அவர்களைச் சோதித்துப் பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார். இப்போது அத்தகைய ஒரு ஆளைபபற்றி அவர் "லீடர்" பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அதைப்பறறிய முழு விவரமும் 1923ஸு ஆகஸ்டு 4வ வெளியான ஹிந்து பத்திரிகையில் காணலாம். நாம் இங்கு அதைப் பற்றி சுருக்கமாகக் கூறுகிறோம் :—

"பரதபூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஸேலம்பூரிலுள்ள கெயிட்ரி பிராம்மணருடைய புத்திரனுகிய பிரபு என்ற நான்கு வயதுள்ள சிறுவன் தன் பூர்வ ஜன்மத்தைப்பற்றிய விஷயங்களைக் கூறுகிறான் என்று பரதபூர் மகாராஜாவின் மூலமாகவே மேற்படி ஸ்ரீமான் இராய்பகதூர் ஷியாம் சுந்தர்லால், C. I. E., அவர்கள் கேள்விப்பட்டு, அம்மகாராஜாவின் உத்தரவுப்படி அவருடைய காரியதரிசியைக்கொண்டு நேரில்போய் சோதனை செய்தார். 1923ஸு மார்ச்சுமீ அச்சிறுவனை அவன் வீட்டில் சோதனை செய்தார்கள். அவன் பின்கண்ட விஷயங்களைக் கூறினான்.

1. முன் ஜன்மத்தில் நான் ஹாடியோரி என்ற ஊரில் ஹார்பக்ஷ் என்ற பிராம்மணன்.

2. எனக்குக் கூர், ஷாம்லால் என்ற இரண்டு புத்திரர்களும், கோகிலா, போலி என்ற இரண்டு பெண்களும் உண்டு. அவர்கள் முறையே கெர்லியிலுள்ள ராம்ஹட் என்பவனுக்கும் நாவாரிலுள்ள கோகால் என்பவனுக்கும் மணம் செய்விக்கப்பட்டார்கள். நான் முதல் பெண்ணுக்குமட்டும் கொஞ்சம் பணம் பரியமாக வாங்கிக்கொண்டேன். சின்ன பெண்ணுக்கு ஒன்றும் வாங்காமலே கொடுத்துவிட்டேன்.

3. எனக்கு ஹாடியோரியில் ஒரு நல்ல வீடிருந்தது.

4. என் வீட்டிற்குப் பக்கத்தில் ஸ்வரூப ஜாட்டின் வீடிருந்தது.

5. ஸ்வரூபஜாட்டுக்கு ஒரு புதல்வனும் ஒரு புதல்வியுமிருந்தார்கள்.

6. அங்கு கல்பதிந்த உயரமான ஒரு பாதை யிருந்தது.

7. அங்கு ஒரு குளமும், அக்குளத்தில் ஒரு வீடுமிருந்தது. குளக் கரையில் ஒரு கும்மட்டம்போன்ற சமாதியிருந்தது."

என்ற இவற்றையும் இன்னும் தன் வீட்டருகிலிருந்த நல்ல தண்ணீர்க் கிணறுகள், தோட்டங்கள், விருட்சங்கள், தன்னிடம் வேலைசெய்த கும ஸ்தா, தன் தொழில், புத்திரன் தொழில், தன் சுற்றத்தார் விஷயம் முதலிய அனேக சங்கதிகளைக் கூறினான். விரிவஞ்சி நாம் அவை முழுமையும் இங்கு வெளியிடவில்லை. ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் முழு விவரமும் காணலாம்.

அச்சிறுவன் கூறிய யாவும் பதிந்துகொண்டு, இராய்பகதூர் ஷியாம் சுந்தர் லால், பரத்பூர் அரசரின் காரியஸ்தரையும் அச் சிறுவனையும் அழைத்துக்கொண்டு அவன் முன்ஜன்மத்தில் பிறந்திருந்த ஊருக்குச்

சென்றூர். அந்த ஊரைச் சிறுவன் கண்டதுமில்லே. அதைப்பற்றிக் கேட்டதுமில்லே யென்று அவர் அறிந்துகொண்டார். அதோடு அவ்வளவு சமாசாரங்களே யவனுக்கு மனப்பாடம் பண்ணிவைத்திருக்க முடியாதென்றும் அறிந்துகொண்டார்.

அங்கு சென்றபின் அவ்வூரிலுள்ள மிக்க வயதுமுதிர்ந்த ஆட்களில் ஐந்தாறு பேர்களே யொன்றுகூட்டி (அவர்கள் பெயர்களனைத்தும் பத்திரிகைகளில் காணலாம்.) எல்லா விஷயங்களேயும் விசாரித்துச் சிறுவன் கூறியபடி யாவும் உண்மையாகவே யிருக்கக் கண்டார். பிறகு அச்சிறுவனே தான் கூறிய ஸ்தலங்களேயும் காட்டினுன்.

இவை யாவும் மேற்படி ஸ்ரீமான் இராய்பகதூர் ஷியாம் சுந்தர் லால், C. I. E., என்பவர் அலஹபாத்தில் பிரசுரமாகும் லீடர் பத்திரிகையில் விவரமாய் எழுதியிருக்கிறூர். ஹிந்து, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன.

நமது மதத்தில் வீண் குற்றங்கூறி நம்மவரில் பாமரர்களே மயக்கமுயலும் பிறமதத்தினர் இதைப்பற்றி மறுத்துக்கூறும் ஆபாச வார்த்தைகளால் நம்மவர் மயக்கங்கொள்ளலாகாதென்பதற்காகவே இதைப்பற்றி வெளியிட நேர்ந்தது. சீடன்.

சந்தா நேயர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு.

கடந்த ஆகஸ்ட்மூ 1உயிலிருந்து பினங், மலாகா, ஸிங்கபூர் முதலிய இடங்களுக்கு வி. பி. அனுப்பப்பட்டு வந்த வழக்கம் நிறுத்திவிடப்பட்டது. ஆகையால் அந்நாட்டிலுள்ளோர் இனி முன்பணமனுப்பியே சந்தாதாரர்களாகச் சேரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேம். புது சந்தாதாரர்களேச் சிபாரிசு செய்வோரும் இதை கவனிக்கக் கோருகிறேம்.

பத்திராதிபர்.



பகவத்கீதை வசனம்.

(69-ம் பக்கத் தொடர்ச்சி.)

அர்ச்சுனன் "ஏ பகவன்! உம்மைச் சரணடைந்து பக்தியோடு சிந்திப்பதினுலேயே இம்மாயை வெல்லக்கூடுமெனின், வேறு எவ்வழியாலும் ஒழிக்கக்கூடாத இம்மாயையை நிக்கிரகம் செய்யும்பொருட்டு யாவரும் உம்மையேன் சரணமடைவதில்லே?" என்று வினவியதற்குப் பகவான் அருளிச் செய்கின்றூர்:—

"ஏ பார்த்த! பூர்வ ஜன்மங்களிற் செய்த பாப கன்மங்களின் வலியால், உள்ளம் பாழாகி, இது நமக்கு நன்மையளிக்கும், இது நமக்கு தீமையளிக்கும் என்ற விவேகம் குன்றி மாயையின் வயப்பட்டோரும், மூடரும், இடம்பம், அகங்காரம் முதலிய அசுர பாவத்தை யடைந்தவரும் என்னேப்

பூஜியார்கள். ஆயினும் என்னைப் பூஜிப்போரும் சிலர் உளர். அவர்களியாரென்பதைக் கூறுதும் கேட்பாயாக.

(1) உலகபோக சம்பந்தமான தனம், ஸ்திரீ, புத்திரர் முதலிய ஐசுவரியங்களை யடைய விரும்புவோர், (2) ஆபத்தையடைந்து அதினின்று தப்பவிரும்புவோர், (3) இது நித்தியம் இது அநித்தியம் என்பதையறிந்து ஜனனத்தை யொழிக்கும்பொருட்டு ஞானமடைய இச்சிப்போர், (4) எனது வாஸ்தவ சொரூபத்தைச் சாக்ஷாத்கரித்த மெய்ஞ்ஞானி, இந்நால்வரும் தத்தம் சக்திக்குத் தக்கபடி என்னை யாராதிக்கும் தவமுடையவர்களாம்.

இந்த நால்வரில் ஞானி (பிரத்யகான்மாவாகிய தன்னை, பரமான்மாவாகிய என்னில் அபேதமா யறிவனாதலின்) மேலானவனாவன். அவன் எனக்கத்தியந்தம் பிரியன், அவனுக்கு நானும் அத்தியந்தம் பிரியன்.

[பொருளை விரும்பி ஈசுவரனைப் பூஜிப்பவன் அர்த்தார்த்தி எனப்படுவன் (அர்த்தம்=பொருள்). ஆபத்தினின்றும் தப்புவதற்காக ஈசுரனைப் பூஜிப்பவன் ஆர்த்தன் எனப்படுவன் (ஆர்த்தி=ஆபத்து). மோக்ஷமடைய இச்சித்து ஈசுவரனைப் பூஜிப்பவன் சிஞ்ஞாசு எனப்படுவன் (சிஞ்ஞாசு=மோக்ஷவிச்சை யுடையவன்). இவர்கள் மூவரும் சுயநலமாகிய ஒன்றையிச்சித்தே பகவானைப் பூஜிப்பவர்கள். ஞானியொருவனே நிட்காம பூஜை செய்பவன்.

சுக்ரீவன், விபீஷணன், உபமன்யு முதலியவர்கள் இகலோக போகங்களை விரும்பியும், துருவன் முதலியோர் பரலோக போகங்களை விரும்பியும் பகவானைப் பூஜித்தார்கள். இவர்கள் அர்த்தார்த்திகள்.

துரோபதை, கஜேந்திரன் முதலியோர் ஆபத்திலிருந்து காப்பாற்றப் படவேண்டிப் பகவானை பூஜித்தார்கள். இவர்கள் ஆர்த்தர்கள்—முசுகுந்தச் சக்கிரவர்த்தி, ஜனகராஜா, உத்தவர் முதலியோர் ஞானமடையவேண்டிப் பகவானைப் பூஜித்தார்கள். இவர்கள் சிஞ்ஞாசுக்கள். இந்த மூவரில் சிஞ்ஞாசு ஞானமடைவதால் நேரே மாயையைக் கடக்கிறான். மற்ற இருவரும் சிஞ்ஞாசுக்களாகி ஞானமடைந்தபின்பே மாயையைக் கடப்பார்கள்]

"ஏ பகவன்! ஞானியே தங்களுக்குப் பிரியன் எனில் ஆர்த்தன் முதலிய மற்ற மூவரும் அப்பிரியர்களோ?" என்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் "அவர்களும் பிரியர்களே, ஆயினும் ஞானி மிகப் பிரியன்" என்று காரணத்தோடு கூறியருள்கிறார் :—

ஏ பார்த்த! ஆர்த்தன் முதலிய மூவரும் உத்கிருஷ்டமானவர்களே. எனினும் ஞானி என் உண்மைச் சொரூபத்தின்கண்ணே சாட்சாத்காரமாய்ப் பொருந்தியிருத்தலின் அவன் எனது ஆன்மாவே என எனது நிச்சயம். இத்தகைய ஞானியாதல் பல ஜனனங்களில் கொஞ்சங் கொஞ்சமாய் ஆசையொழிந்து நிராசையுதிக்கும் கடைசி ஜன்மத்தில் சித்திப்பதாகும்.

(இனிப்பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞான மெளிதிலுண்டாம்........") (வாசிட்டம்-சனகராசன் கதை.)

(அத்தகைய ஞானியின் அருமையைப்பற்றி பகவான் அருள்கிறார்.)

அந்த ஞானி அறியப்பட்ட எல்லா வஸ்துக்களும் அதிஷ்டானமாகிய என்னையன்றியில்லை என்கிற உண்மையைப் பரோக்ஷமாயறிந்து, பரமாத்மாவாகிய என்னில் அபேதமாய்ப் பொருந்தியிருப்பன். ஓ கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய அர்ச்சுனா! அத்தகைய ஞானி அடைதற்கு மிக்க அரியவனாகும்.

ஏ பார்த்த! பூர்வ வாசனையால் தம் அந்தக்கரணங்களில் வைத்த காமாதிகளையுடையோரின் அந்தக்கரணங்கள் முழுமையும் நம்மினின்று பராமுகம் பண்ணப்பட்டு தமக்கு வேண்டுவனவற்றை யளிக்கும் க்ஷுத்திரதேவதைகளை உபாசியா நிற்பர்.

(மாரணம், மோகனம், உச்சாடனம், ஸ்தம்பனம், ஆகர்ஷணம், வசீகரணம் முதலியவற்றின் சம்பந்தமான தாழ்ந்த இச்சைகளையுடையோர் அவற்றை ஈசுரசேவையால் அடைய விரும்புவது அசக்கியமெனக் கருதி அத்தகைய அல்ப இச்சைகளைப் பூர்த்திசெய்விக்கும் க்ஷுத்திர தேவதைகளை ஜபம், உபவாசம் முதலியவற்றால் உபாசிப்பார்கள்.) எவன் சிரத்தையோடு ஒரு தெய்வத்தைப் பூஜிக்கிறானோ அந்தச் சகாமபுருஷனுக்கு அத்தெய்வத்தினிடத்து நிலையான பக்தியை அந்தரியாமியாகிய நான் அளித்திடுவேன். என்னாலளிக்கப்பட்ட பக்தியோடு அந்த அந்நிய தெய்வங்களை நாடோறும் நம்பிக்கையோடு ஆராதிப்பவர் கோரும் காமிய பதார்த்தங்களை யெல்லாம் நானே அவர்களுக் களித்திடுவேன்.

ஏ பார்த்த! இந்த க்ஷுத்திர தெய்வங்களைத் தம் மனதில் மெய்த்தெய்வங்களென்றே கருதி ஆராதனம் செய்யும் அற்ப மனமுடையவர்கள் அடையும் பலன் வீணாக நாசமுடையது. அவர்கள் ஆராதிக்கும் அத்தெய்வங்களும் நாசமுடையனவாம். அத்தேவதைகளை யாராதிப்பவர்கள் அத்தேவதைகளையே யடைவார்கள். பரமான்மாவாகிய என்னை யாராதிப்பவர்கள் என்னையே யடைவார்கள்.

[எவனெவன் எதையெதை யாராதிக்கிறானோ அதையதையே யடைவன். பிரத்யகான்மாவான தன் நிஜவடிவை யறிந்து பரமாத்மாவை அபேதமாய்ச் சாட்சாத்கரித்தவன் அப்பரமான்மாவையே யடைகிறான்.

" * * *

ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போது
மியாதொன்று பாவிக்க நான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்

* * * * " (தாயுமானவர்)]

"ஓ பகவானே! தங்களை நேரே யுபாசிப்பதால் அழிவற்ற உத்தமப் பயனை யடையலாமெனில், யாவரும் தங்களையே உபாசிக்காத காரண மென்ன?" என்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் அருளிச்செய்கின் றார் :—

ஏ பார்த்த! விவேகமில்லாத புருடர்கள் பகவானாகிய நான் நித்தி யன், அழிவற்றவன், ஒப்புவமையில்லாதவன், அத்துவிதானந்த சொரூபன் என்று அறிகிறார்களில்லை. மற்றோ இவன் கிருஷ்ணன், நந்தகோபன் மகன், நம்போல் விவகாரங்களோடு கூடியிருப்பவனாதலின் நித்தியானந்த னலன், சாதாரண சீவர்களில் இவனும் ஒருவன் என்றே கருதாநிற்பர்.

"ஏ பகவன் தாங்கள் யாவரிடத்துமில்லாத அனேக விசேஷ குணங் களும் சகலஐசுவரியங்களும் பொருந்தியுள்ள சர்வேசுரனாக விருக்கத் தங் களை அவிவேகிகள் சாதாரண மனிதனாகவும் சீவனாகவும் கருதுவா னேன்?" என்ற அர்ச்சுனன் ஐயத்தை நீக்குவான் பகவான் அருளிச்செய் கிறார் :—

ஏ பார்த்த! நான் பிரகிருதியாகிய மாயையில் மறைந்திருப்பவனாத லில், உலகமாயையில் மனம் பொருந்தியுள்ள ஞான சூனியர்கள் ஜனன மரணமற்ற என்னை அறிந்துகொள்வதில்லை. முன் சென்றவைகளும், இப்போதுள்ளவைகளும், இனிமேல் உண்டாகுபவைகளுமாகிய சர்வபிரா ணிகளையும் நான் அறிந்துளேன். உலகிலுள்ள சகலப் பிராணிகளும் ஜனிக்கும்போதே இச்சை துவேஷம் என்னும் குண வேறுபாட்டால் உண் டாகும் மோகத்தில் அழுந்தியவர்களாய் தேகபாவனையைப் பொருந்தி யிருப்பதால் அந்தரியாமியாகவுள்ள என்னை அறியமாட்டார்கள்.

[சீவர்கள், இராகத்துவேஷங்களோடு பொருந்தியவர்களாய் மனமா யையின் வழியே யுழன்றுகொண் டிருப்பதால் அத்தகையோர் பரமான்மா வின் உண்மைச் சொரூபத்தை யறியமாட்டார்கள். பரமேசுவரனை யுபா சிக்கிறவர்களாயினும் இச்சையையொழித்து மனதின் பசையறுத்து, பிரத் யகான்மாவாகிய தன்னை யறிந்தாலே பரமான்ம சொரூபத்தை அறியலா கும்.]

(மற்றப்படி எத்தகையோர் தம்மை யாராதிப்பர்கள் என்பதைப் பக வான் அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! முன் ஜன்மங்களிற் செய்த நல்வினைப்பயனையுடைய அதிகாரிகள், பாவகர்மங்கள் முழுமையும் ஒழியப்பெற்று, மாயையின் மயக்கில் சிக்காதவராய் பரமேஸ்வரனாகிய என்னிடத்தில் நிலைக்கப்பெற்ற மனதோடு என்னையே ஆராதிப்பார்கள்.

(இப்போது பகவான், சில கேள்விகள் கேட்கும்படி அர்ச்சுனனைத் தூண்டும்பொருட்டுப் பின்வரும் விஷயத்தைக் கூறியருள்கின்றார். பின் வரும் 8-வது அத்தியாயத்தில் அதன்பொருள் விரித்துக் கூறப்படுகிறது.)

ஏ பார்த்த! பிணி, மூப்பு, பிறப்பு, இறப்பு ஆகியவற்றை யொழிக்கும்பொருட்டு ஞானத்தை யடையக்கருதி பரமேசுரனாகிய என்னை யாசிரயித்து பலேச்சையின்றி கர்மங்களைச் செய்யும் அதிகாரிகள், தத்பத இலக்ஷியார்த்தமான பிரம்மத்தையும், அதனையறியும் துவம்பத இலக்ஷியார்த்தமான பிரத்யகான்மாவையும், அனுஷ்டிக்கவேண்டிய சிரவணாதிகருமங்களையும் அறியாநிற்பர்.

அவ்வாறு என்னைச் சதா சிந்தியாநிற்கும் அதிகாரிபுருடர், என்னிடத்தில் பொருந்திய மனதுடையவர்களாய், இத்தேகத்தை விட்டு நீங்கும்போது பரமான்மாவாகிய என்னை யுள்ளபடியே யறிவார்கள்.

[பகவானை மேற்கண்டபடி சதா சிந்திக்கும் புருஷர்களின் இந்திரிய முதலிய கரணங்கள் ஒருமைப்படாவிடினும், பகவானது அருளாலும் பூர்வாப்பியாச சமஸ்கார வலியாலும் மரணகாலத்தில் அவர்களுடைய அந்தக்கரணம் பரமான்மாகாரத்தையே யடையும். ஆதலின் அவர்கள பக்தி யோகத்தால் கிருதார்த்தராவார்கள் என்று பகவான் அருளிச்செய்தார்]

(தொடரும்) சீடன்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.



ஓட்டு! ஓட்டு!! ஓட்டு!!!

இப்போது நம் மாகாணமெங்கும் "ஓட்டு! ஓட்டு! ஓட்டு!" என்பதே பெருங்கோஷ்டமாக விருக்கிறது. பத்திரிகைகளிலும், நகரச் சுவர்களிலும எங்கும் இதைப்பற்றிய விளம்பரமே அதிகமாக விருக்கிறது. எதை யோட்டுவதோ என்பது கேள்வி. தற்காலம் நம்மவரிற் பெரும்பாலார் கொஞ்சநஞ்ச மிருக்கும் தேசாபிமானத்தையும் ஓட்டும் வழியில் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

நம்மவரில் வாக்களிக்கும் உரிமைபெற்றிருப்போரில் பெரும்பாலர் கல்வியில்லாதவர்களாக அல்லது மிகக் குறைந்த கல்வியுடையவர்களாக விருக்கிறார்கள். நகரச் சங்கங்களுக்கும், மந்திரி சபைகளுக்கும் அவயவிகளாகச் செல்ல விரும்புவோர்களில் எத்தகையோர்களுக்கு நாம் வாக்களிக்க வேண்டுமென்பதாவது அவர்கள் அங்கு சென்று என்ன செய்ய வேண்டுமென்பதாவது இவர்களுக்குத் தெரியாது.

அத்தகையோர்க்கு நாம் கூறுவதாவது :—

1. நகர சங்கத்திலாவது வேறெந்த சபையிலாவது அவயவியாக அமர்ந்தால் நமக்குச் சில அனுகூலங்கள் கிடைக்கும், கௌரவம் கிடைக்கும் என்ற நோக்கமுடைய அபேட்சகர்களை யுங்கள் மனதினின்றும் ஓட்டுங்கள்.

2. வாக்குப் பெறவேண்டிய காலத்தில் மட்டும் உங்கள் வீடுகளுக்குப் பன்முறை வந்து ஆசனங்கூட வேண்டாமென்று தெருத்திண்ணை

யின்மேலேயே உட்கார்ந்து உங்களைத் தட்டிக்கொடுத்து உங்கள் வாக்கைப்பெற்று, தம் பதவியை யடைந்தபின் உங்களுக்கு தரிசனம் கொடுப்பதே தங்கள் அந்தஸ்துக்குத் தாழ்வென்று கருதுவதோடு, ஊரார் நன்மை யெக்கேடு கெட்டாலும் கெடட்டும், அதிகாரிகளின் தயவையும், கௌரதா பட்டத்தையும் பெறக்கருதி அவர்கள் பிரியப்படி தலையாட்டும் ஆசாமிகளுக்கு வாக்களிக்கும் எண்ணத்தை யுங்கள் மனதினின்றும் அடியோடு ஓட்டுங்கள்.

3. அபேக்ஷகர் செல்வவந்தர்—மிக்க செல்வாக்குடையவர்—நாம் அடிக்கடி சந்திக்கிற மனிதர்—நம் சுற்றத்தார், சினேகிதர்கள் வந்து சிபாரிசு செய்கிறார்கள் — அப்படிப்பட்டவர் நம் வீடுதேடி வந்துவிட்டார்—இவர் வட்டிக்கு யாவர்க்கும் பணம் கொடுப்பவர், இவர் தயவு நமக்கும் எப்போதேனும் வேண்டியிருக்கும்—என்ற காரணங்களுக்காவது—நாம் ஒருநாள் வேலைக்குப் போகாமல் வாக்களிக்கச் செல்வதற்காக நமக்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறார்கள், கௌரவமாய் மோடாரில் ஏற்றிச் செல்கிறார் என்கிறவைகளைக் கருதியாவது வாக்களிக்கக் கருதும் இழிவான நோக்கத்தை அடியோடு ஓட்டிவிடுங்கள்.

4. சுயநலத் தியாகம் செய்யச் சித்தமாகவிராத எவனும் பொதுநல ஊழியம் செய்யக்கூடியவனுகான் என்பது உண்மை.

ஒருவர் நகரச் சங்கத்திற்கோ வேறெந்த பொதுச்சபைக்கோ அவயவியாகச் செல்வதாயின் அவருடைய சொந்த காரியங்களில் அடிக்கடி அனுனுகூலம் நேரிட்டே தீரும். அப்படியிருக்க அப்பதவியையடைய விரும்புவானேன்?

இதற்கு, "நம் நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணங்கொண்டு சுயகாரியங்களுக்கு இடையூறு நேர்வதையும் சட்டைசெய்யாமல் சுயநலத்தியாகம் செய்து அப் பொதுநல ஊழியம் செய்ய முன்வருகிறார்" என்று பதில் கூறலாகும்.

அப்படிப்பட்டவர் "எனக்கு இத்தொண்டு செய்யப் பிரியமிருக்கிறது. நீங்கள் எனக்கு வாக்களித்து என்னை அச்சங்கத்தில் உங்கள் பிரதிநிதியாக அனுப்பினுல் என்னுல் கூடியவரையில் உங்கள் நன்மையின் பொருட்டு உழைக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று அறிவித்துவிடுவார். அவ்வளவேயன்றி அதற்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து பகீரதப் பிரயத்தனம் செய்யமாட்டார்.

இக்காலத்தில் அபேக்ஷகர்கள் வாக்களிக்கும் சுதந்தரமுடையவர்களை மயக்கி வசப்படுத்துவதற்காக அந்தந்த விடங்களுக்குத் தகுந்த ஆட்களை யேற்படுத்தி வேலைசெய்கிறார்கள். அவர்களுக்குப் பணம், சால்வை முதலியவைகளைப் பரிசளிக்கிறார்கள். தாங்களும் நேரில் சென்று வாக்களிப்போரை வேண்டிக்கொள்கிறார்கள். அபேக்ஷகர்களுக்குள் போட்டி

யுண்டாகி ஒருவரை யொருவர் வெல்வதற்காக வேலை செய்யும்போது அத்துமீறிய காரியங்களும் நடக்கின்றன. பணமோ இலட்சியமின்றிப் பல வழிகளில் செலவழிக்கப்படுகிறது.

இப்போது சுயநலத்தைத் தியாகம்செய்துகொண்டு பொது நலத்திற்கு உழைக்க இத்தகைய சிரமம் எடுத்துக்கொண்டு பணத்தையும் செலவுசெய்யும் சுபாவம் இயற்கையில் உடைய மனிதர் இருக்கிறார்களா என்பதே நமக்கு மிக்க வியப்பை யளிக்கிறது. உண்மையில் பொதுநலத்திற்கு உழைப்பதற்கே முன்வருவோர், இன்னொருவர் தக்கவர் அதே பதவியையடைய முயல்வதைக் கண்டால் அவர்களோடு போட்டிக்கு வேலை செய்வார்களென்று நினைப்பதற்கில்லை.

பெரும்பாலான அபேக்ஷகர்கள் சபையில் அவயவிகளாக அமர்ந்ததே வாக்களித்த ஏழைகளை யடியோடு மறந்துவிடுகிறார்கள். அவர்கள் வசிக்கும் பிரதேசத்தைப் பிறகு எட்டிப்பார்ப்பதேயில்லை. தாங்கள் எவ்வாறு நடந்துகொண்டால் அதிகாரவர்க்கத்தினர்களின் தயவைப் பெறலாமோ அவ்வாறு நடக்கவே தொடங்கிவிடுகிறார்கள்.

ஆகயைால் வாக்களிப்போர் அபேக்ஷகர், சீவகாருண்யமுடையவரா, சுயநலத்தைக் கருதாமல் அன்னியரின் நலத்திற்காகப் பாடுபடும் சுபாவமுடையவரா, சபையில் நமக்குள்ள குறைகளை யஞ்சாது எடுத்துக்கூறி அவற்றை நீக்க வாதாடும் தைரியமுடையவரா, அதிகார வர்க்கத்தினரின் தயவைப்பெற்று அவர்களிடம் பட்டம் வாங்கவேண்டுமென்ற ஆசையில்லாதவரா என்று நன்றாக அறிந்துகொண்டு தகுதியுடையோர்க்கே வாக்களிக்கவேண்டும். தேச ஊழியத்திற்காகப் பணம் சேர்க்கும் சங்கத்திற்கு உதவிவேண்டுமென்று கேட்டால் 5 ரூபாயும், கவர்னர் ஜெனரல் வருகிறார் அச்சமயம் வாணவேடிக்கை நடத்தவேண்டும் என்று பணம் தண்டுவோர்க்கு 500 ரூபாயும் கொடுக்கும் தேசாபிமானச் சிங்கங்களுக்கு வாக்களிக்கக் கனவிலும் கருதாதீர்கள். இவ்விஷயத்தில் வாக்களிப்போர் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளாமல் சிபாரிசையும், செல்வாக்கையும், மோட்டாரையும் கருதி, சுயநலத்தையே உள்ளத்தில் வைத்துக்கொண்டு வெளிக்கு ஊராருக்கு நன்மை செய்வதற்கே அவயவியாகச் செல்ல விரும்புவதாக நடிப்போர்க்கு வாக்களித்துவிட்டால் நமக்கு நாமே கேடு விளைவித்துக் கொண்டதாகும் என்பதை மறவாதீர்கள். ஓர் நண்பன்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

அச்சமயம் அருகில் எங்கோ ஆள் அரவம் கேட்டதாய்த் தெரிந்தது. கறுப்பண்ணன் "ஆ! இங்கு உற்றுக் கேட்பவர்கூட இருக்கிறார்களா" வென்று சட்டென்று வெளியிற் சென்றான். ஆனந்தவிங் உடனே அச்சவத்தின் நெற்றி உச்சி முதலிய விடங்களில் கரத்தை வைத்துப்பார்த்து,

பனிக்கட்டிபோல் விறைந்திருக்கக் கண்டு "சரி சரி, இது சவத்தின் விறைப்பே" யென்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அதற்குள் கறுப்பண்ணன் திரும்பி வந்துவிட்டான். ஆனந்தஸிங்கின் செய்கையை யவன் காணவில்லை. வந்தவுடனே "நீ ஏதாவது சத்தத்தைக் கேட்டாயா?" என்றதற்கு ஆனந்தஸிங் இல்லை என்ருன். கறுப்பண்ணன் "அப்படியானுல் நான் நினைத்தது பிசகே. இனி விவகாரம் நடக்கட்டும்" என்ருன்.

ஆனந்தஸிங்.—ஆம். விஷயத்தைக் கூறு. என்னுலாகவேண்டியதென்ன? இதுகாறும் நடந்ததெல்லாம் கூடி இக்கன்னிகை இறந்துபோ யிருக்கிருள். இவ்வளவே எனக்குத் தெரிந்தது. நான் இதிற் செய்ய வேண்டியதென்ன?

கறுப்:—"இவளைக் கொன்றவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும்" என்ருன்.

இதைக்கேட்ட ஆனந்தஸிங் திடுக்கிட்டு "கொலை செய்தவர்களா! சவத்தின் நிலைமையால் அவள் அக்கிரமமாய்க் கொல்லப்பட்டதாய்த் தெரியவில்லையே" என்ருன்.

கறுப்:—இவள் விஷத்தால் கொல்லப்பட்டாள்.

ஆன:—அப்படியானுல் உனக்கு யார்மேலாவது சந்தேகமுண்டாயிருக்கிறதோ?

கறுப்:—உண்டு.

ஆன:—விஷத்தால் கொல்லப்பட்டாளென்று எப்படித் தெரியும்? சவச்சோதனை நடந்ததோ?

கறுப்:—இல்லை. அவளே கூறினுள்.

ஆன:—அவள் அதையறிந்துகொண்டிருந்தால், கொன்றவன் யாரென்று தெரிவித்தாளோ?

கறுப்:—இல்லை.

ஆன:—விஷம் எப்படி கொடுக்கப்பட்டது?

கறுப்:—அவளுக்குத் தெரியாது.

ஆன:—இது அதிசயமே. விஷம் வைக்கப்பட்டதென்று தெரிந்துகொண்டபோது யார் கொன்றதென்று தெரியவில்லையா?

கறுப்:—அப்படி யவளுக்குச் சந்தேகம் தோன்றியிருந்தாலும் அந்த ஆளை வெளியிடமாட்டாள்.

ஆன:—ஏன்?

கறுப்:—அவளுக்குள் காரணம் இருக்கிறது.

ஆன:—நீ சவத்தைச் சோதனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

கறுப்:—அது அனுவசியம். குற்றவாளியைக் கண்டுபிடித்த பின் செய்துகொள்ளலாம். புதைத்து ஒரு வருடமாகுமட்டும்கூட விஷத்தின் அடையாளம் தேகத்தில் இருக்கும்.

ஆன :—எதற்கும் நிச்சயமா யறிந்துகொள்வது நலம்.

கறுப் :—விஷம் வைக்கப்பட்டதற்கு வேண்டிய அத்தாட்சிகள் அனேகம் என்னிடமிருக்கின்றன. குற்றவாளி யகப்பட்டுவிட்டால் யாவும் ருசுப்படுத்துகிறேன்.

இவன் பேச்சுகளில் யோசனையும் தக்க காரணமும் அடங்கியிருப்பதைக் கண்ட ஆனந்தலிங் இவனை யுள்ளேயே மெச்சிக்கொண்டான். முன் இவன்மேலிருந்த சந்தேகம்கூடக் கொஞ்சம் குறைந்துவிட்டது.

ஆன :—“உனக்கு யார்மேல் சந்தேகம்?” என்றான்.

கறுப் :—அது வெறும் சந்தேகமே. நீ விவகாரத்தில் நுழைந்து உன் யோசனைப்படி யார்மேலாவது சந்தேகம் ஏற்பட்டபின் இருவரும் ஒத்திட்டுப் பார்த்துக்கொள்ளலாம். நான் இப்போதே யென் சந்தேகத்தைக் கூறிவிட்டால் உன் யோசனை யதன்மேலேயே செல்லும்.

இவன் தந்திர சாமர்த்தியத்தைக் கண்டு ஆனந்தலிங் வியப்படைந்து “நான் முதலில் பற்றிச்செல்ல எந்த உளவாவது வேண்டுமே” என்றான்.

கறுப்பண்ணன் வா என்கூடவென்று ஆனந்தலிங்கை மேல்மாடியிலிருக்கும் ஒரு அறைக்கு அழைத்துப்போய் அதன் கதவைத்திறந்து தான் வாசற்படியண்டையே நின்று, ஆனந்தலிங்கை நோக்கி அறைக்குள் சுட்டிக்காட்டி “இனி யுன் வேலையை நடத்து” என்றான்.

அந்த அறை நன்றாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு விசாலமான பள்ளியறை. ஆனந்தலிங் இது இறந்தவள் பள்ளியறை, இங்குதான் அவள் இறந்தாள் என்று தெரிந்துகொண்டு கருப்பண்ணனை நோக்கி,

“இந்தத் துக்கசம்பவம் நடந்ததுமுதல் இதற்குள் யாராவது வந்திருக்கிறார்களோ?” என்றான்.

கறுப் :—நானும் அம்பாலிகையின் தோழியுமட்டுமே வந்திருக்கிறோம்.

ஆன :—யார் அம்பாலிகை?

கறுப் :—இறந்தவள் பெயர் அம்பாலிகை.

ஆன :—அத்தோழிமேல் சந்தேகமுண்டோ?

கறுப் :—நீயே கண்டறியவேண்டும்.

ஆன:—உனக்குண்டோ?

கறுப் :—இல்லை.

ஆன :—“அவ்வளவு போதும். இனி நீ போகலாம்” என்றான்.

கறுப்பண்ணன் “நான் கூடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்” என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதே ஆனந்தலிங் அறையின் கதவை மூடி யுட்பக்கம் பூட்டுபோட்டுக்கொண்டு, பூட்டின் துவாரத்தைத் தன் கைக்குட்டையாலடைத்துவிட்டான். இது மிக்க நுட்பமான விவகாரமென்றும், கொஞ்சம்

பிசகிவிட்டால் ஏமாந்து முட்டாளாய் விடுவோமென்றும், அதோடு உண்மைக் குற்றவாளி தப்பித்துக்கொள்ளவும் நிரபராதி தண்டனை யடையவும் நேரிடுமென்றும் அறிந்துகொண்டான். ஆனால் அத்தகைய விவகாரத்திற்கு ஆனந்தஸிங் பூரணமாய்த் தகுதியுடையவனே.

அவன் அங்குள்ளவற்றை மிக்க ஜாக்கிரதையோடு அணுவளவு வஸ்துவைக்கூட விடாமல் சோதனை செய்தான். முதல்முதல் இறந்தவளுடைய புகைப்படமே யவன் கையிற் சிக்கியது. அது பின்னால் உபயோகமாகுமென்று ஜேபியில் வைத்துக்கொண்டான். பிறகு அங்கு அவனுக்கு அகப்பட்ட உளவுகள் பூரணமான அத்தாக்ஷிகளாகவும் குற்றவாளியை நேரே காட்டக்கூடியவைகளாகவு மிருந்தன. ஆனந்தஸிங் அவற்றைப் பார்த்தபின் சற்றுநேரம் சிந்தித்து,

"ஆகா! இது மிக்க தந்திரசாமார்த்தியமான விளையாட்டு. ஆயினும் கொஞ்சம் அளவுகடந்துவிட்டது. புளுகத் தெரியாதவர்கள் புளுகினால் இப்படித்தான் கொஞ்சம் அதிகப் பொய்யைச் சேர்த்துவிட்டு அகப்பட்டுக்கொள்வது வழக்கம்" என்று மெதுவாய்த் தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

ஆனந்தஸிங்குக்குச் சவம் இருக்கும் அறையில் தான் சற்று நேரம் தனியாய் இருக்கவேண்டுமென்று மனதில் ஒரு ஆவலுண்டாயிற்று. அதற்குக் காரணம் தோன்றவில்லை. அவன் சுபாவ அனுபவப்படி, அவ்வாறு தோன்றினால் அதில் தனக்கு அனுகூலமான ஏதோ விசேஷம் இருக்கிறதென்று அவன் அறிவான். அதனால் இதற்குக் காரணம் பின்னால் புலப்படும், எப்படியாவது நாம் ஒரு தந்திரம் கண்டுபிடித்து அப்படிச் செய்தே தீரவேண்டும் என்று எண்ணிக்கொண்டான். சற்றுநேரத்திற்குள் ஒரு துணிகரமான யோசனை யவன் மனதிற்பட்டது.

ஆனந்தஸிங் அறையை விட்டிறங்கிக் கூடத்திற்கு வந்தபோது கறுப்பண்ணன் மிக்க ஆவலோடு தன் வரவை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கிறான் என்று அவன் மனதிற்பட்டது.

கறுப்பண்ணன் அவனை யொரு சிறிய அறைக்கு அழைத்துப்போய் உட்காரவைத்து,

"உனக்குள் ஒரு வழி யேற்பட்டதா?" என்றான்.

ஆன :—ஆம்.
கறுப் :—உனக்கு யார்மேல் சந்தேகம் ஏற்பட்டது?
ஆன :—முதலாவது இந்த மனோகரன் என்பவன் யார்?
கறுப் :—இறந்தவளுடைய சிற்றப்பன் புத்திரன்.
ஆன :—நீ யவளுடைய மாற்றாந்தாய் புத்திரன்.
கறுப் :—ஆம்.
ஆன :—இப்போதிருக்கும் சந்தர்ப்பப்படி அவள், இறந்துபோய்விட்டால் அவளுடைய திரண்ட ஆஸ்தி யுனக்கே கிடைக்கும்.

கறுப் :—ஆம்.

ஆன :—இப்போதிருக்கும் மரண சாசனம் இல்லாவிட்டால் சட்டப்படி யவனே அவள் ஆஸ்தியை யடைவான்.

கறுப் :—ஆம்.

ஆன :—இப்போது மனோகரன் இந்த மரணசாசனம் செல்லத்தக்கதல்ல வென்று வழக்காடவெண்ணி யிருக்கிறனல்லவா ?

கறுப் :—ஆம்.

ஆனந்தலிங் இச்சங்கதிகளை யெல்லாம் அறையில் அகப்பட்ட பத்திரங்களால் தெரிந்துகொண்டான். அவை யிவன் கண்களுக்குச் சுலபமாய் அகப்படவேண்டுமென்றே வைக்கப்பட்டிருந்தவைபோல் அவன் மனதிற் பட்டது.

சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தார்கள். கறுப்பண்ணன் மனம் மிக்க ஆவலோடு பதைத்துக்கொண்டிருந்தது. அவன் ஆனந்தலிங்கை நோக்கி,

"இப்போதகப்பட்ட ருசுவுகள் மனோகரனை யுடனே கைது செய்யக் கூடியவிதமாய் நேரே யவனைக் குற்றவாளியென்று காட்டுகிறதல்லவா ?" என்றான்.

ஆன :—இல்லை.

கறுப்:—ஏன் அவள் மரணத்தினல் அவனுக்கு அனுகூலமிருக்கிறதென்று தெரிகிறதல்லவா ?

ஆன :—ஆம். உண்மையாகவே அவனுக்கு அனுகூலமிருக்கிறது. ஆனல் அதைவிட இன்னொரு மனிதனுக்கு அவள் மரணத்தில் மிக்க அனுகூலமிருக்கிறது.

கறுப் :—யாருக்கு ?

ஆன :—" உனக்குத்தான் " என்றான். (தொடரும்)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

பொது சமாச்சாரம்

ஜபானில் பயங்கரமான பூகம்ப விபத்து.

இந்த செப்டெம்பர்மாத ஆரம்பத்தில் ஜபானில் கேட்போர் மனங் கலங்கும்படியான பூகம்ப விபத்துகள் நேர்ந்தன. டோகியோ, யோகஹாமா, காமகூரா, யோகஸாகா முதலிய நகரங்களில் பயங்கரமான பூமியதிர்ச்சியுண்டாகிப் பிளவுகள் ஏற்பட்டு பூமியின் கீழிருந்து தீச்சுடர் கிளம்பி கட்டிடங்களெல்லாம் அழிந்து பஸ்மீகரிக்கப்பட்டன. டோகியோவில்மட்டும் இலட்சத்து ஐம்பதினாயிரம்பேர் மாண்டதாக முதல்சங்கதி வந்தது. மேற்கண்ட விடங்களிலிருந்த கடற்படை யாஸ்தானங்களனைத்தும் அழிக்கப்பட்ட பேட்டைகள், தொழிற்சாலைகள், பிரம்மாண்டமான கட்டிடங்கள் யாவும் அப்படியப்படியே அழிந்து குவிந்துவிட்டன. கடலலைகள் பெருகிப் பல ஊர்களை முழுகடித்துவிட்டன.

ஜபானிய இளவரசராகிய மட்ஷிகூடா என்பவர் பூகம்பத்தால் காய மடைந்து மரித்தார். அரசரின் மாளிகை பாதிக்குமேல் தீக்கிரையாகியது. பல விடங்களில் மாண்ட ஜனங்கள் மிருகங்கள் முதலியவைகளின் தொகை யின்னும் தெரியவில்லை. நூற்றுக்கணக்கான மைல்கள்தூரம் இரயில் பாதையும் பாலங்களெல்லாமும் அழிந்துபோயினவாம். டோகியோ நகரின் ஜனத்தொகை 21 இலக்ஷத்து 73 ஆயிரம் எனின் (சென்னை ஜனத்தொகை 5 இலக்ஷத்துச் சொச்சம்) எவ்வளவு பெரிய நகரமாக விருக்க வேண்டும். அந்நகரம் அழிவதாயின் என்ன கோரம்.

பின்னுல் 6-9-'23-ல் வந்த செய்தி.

10 இலட்சம் ஜனங்கள் வீடின்றித் தவிக்கின்றனர். 15 இலக்ஷம் மாண்டனர். மந்திரிகளில் இருவர் ஒகேன், நிராநமா என்பவர்கள் காணப் படவில்லை. அரசகுமாரர்கள் கெய், யாமஷாஞு, ஷிமிஸவி, என்ற மூன்றுபேர் மாண்டனர். கேயின் என்ற அரசகுமாரரும் தளகர்த்தரும் காணப் படவில்லை. இரண்டு மாஜி பிரதம மந்திரிகளும் இறந்தனர். முதல்தேதி முதல் எல்லா தந்திப்போக்கு வரத்துக்களும் தடைப்பட்டிருக்கின்றன. டோகியோவில்மட்டும் 5 இலட்சம்பேர் மாண்டதாகக் கணக்கிடப்பட்டது. யோகஹாமாவில் 40 ஆயிரம்பேர் மட்டுமே யிருக்கிறுர்கள். மற்ற பேர் இறந்தோ ஓடியோ போய்விட்டனர். டோகியோவில்மட்டும் 35 இலட்சம் மூட்டையரிசி நாசமாயிற்று. பல இரயில் ஸ்டேஷன்கள் எரிந்து போயின. யோகஹாமா பட்டணம் சாம்பலாய்விட்டது. இராஜ குடும்பத்தில் பலர் இறந்தனர். கஷ்டம் சகிக்கமுடியாமல் எண்ணிறந்த பேர் நதியில் வீழ்ந்து மாண்டனர். நோயாளிகளும் வயோதிகரும் மிதிப்பட்டு மாண்டனர். மொததம் 20 ஆயிரம் சதுரமைலுக்கு விபத்து நேர்ந்தது. கடைசியில் மாண்டவர் தொகை எண்ண ஒண்ணுதென்று கூறப்படுகிறது.

அமெரிகா மிக்க உதவி செய்யத் தொடங்கியிருக்கிறது. இங்கிலாந்திலும் சீனு, ஆஸ்டிரியா நாடுகளிலும் உதவிசெய்யப் பணம் சேர்க்கப்படுகிறது. நம் நாட்டிலும் மிக்க அனுதாபமுண்டாகி உதவிசெய்ய ஆங்காங்கு கூட்டங்கள்கூடி நிதி வசூல்செய்ய ஆரம்பிப்பதாய்த் தெரிகிறது. அந்தோ மிக்க பரிதாபம்—மிக்க பரிதாபம்—ஆண்டவன் கட்டளையை யாரே யறியவல்லர். மனிதன் அகங்காரம்கொண்டு இயற்கையை வெல்வதாகவும், பஞ்ச பூதங்களையும் அடக்கியாள வல்லேனென்றும் அகம்பாவமடைகிறுன். பூதங்களின் இத்தகைய செயல்களை நோக்கும்போது மனிதன் தன் சக்தி இம்மியளவு கூட கணக்கிடத் தக்கதல்லவென்று உணர்ந்து, சர்வ வல்லமையுடைய ஒருவனே சக்திமான் என்றறிந்து, அகங்காரத்தையொழித்து அவன் அடியாற்கடியேன் என்று அடங்கலே தகுதியாகும்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

உருத்ரோத்கார்ஞு ஐப்பசிமீ—கலி 5025-சாலிவாகனம் 1846
பசலி 1333—கோல்லம் 1098-99—ஹிஜரி 1342
இங்கிலீஷ் 1923ஞு அக்டோபர்மீ—நவம்பர்மீ

ஐப்பசிமீ	அக்டோபர்மீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	17	புத	அ2)-13	உத்36-58	அ36-58சி	விஷு புண்யகால 31-55
2	18	வியா	நவ19-53	திரு38-45	சித்60	சரஸ்வதிபூஜை
3	19	வெ	தச21-18	அவி42-5	சித்60	விஜயதசமி, சோபபத
4	20	சனி	ஏகா24-5	சதை46-48	அ46-48சி	மத்வ, சர்வ ஏகாதசி
5	21	ஞா	து28-3	பூரட்52-25	சி52 25அ	பீமநதிபுஷ்கரம்
6	22	திங்	திர33 3	உத்ரட்58-55	சித்60	பிரதோஷம், கரிநாள்
7	23	செவ்	சது38-40	ரேவ60	சித்60	திருதினஸ்பிருக்
8	24	புத	○44-40	ரேவ5-58	மர60	பௌர்ணமி
9	25	வியா	பிர50-50	அசு13-15	அ13-15சி	மழை 9-க்குள்
10	26	வெ	துதி57-10	பர✕20-43	சித்60	கிருத்திகை
11	27	சனி	திரி60	கிரு28-5	அமி60	திருதினஸ்பிருக்
12	28	ஞா	திரி3-15	ரோ35-8	சித்60	
13	29	திங்	சது8-50	மிரு41-40	அ 41-40சி	
14	30	செவ்	பஞ்13-40	திரு47-20	ம47-20சி	
15	31	புத	சஷ்17-28	புன51-50	சித்60	
16	1923ஞு நவம்பர்மீ 1	வியா	சப்19-55	பூச53-50	அ 53-50சி	
17	2	வெ	அ20-30	ஆயி55-50	மர60	
18	3	சனி	நவ19-10	மக54-58	அ54-58சி	
19	4	ஞா	தச15-55	பூர52-15	சி52-15அ	
20	5	திங்	ஏ10-48	உத்47-48	சித்60	
21	6	செவ்	து3-55 திர55-45	அஸ்41-45	சித்60	இராததிரி நரகசதுர்த்தி ஸ்நானம்
22	7	புத	சது 46-43	சித்34-43	சித்60	தீபாவளி பண்டிகை, மாச சிவராத்திரி
23	8	வியா	● அ37-3	சுவா27-3	அ27-3சித்	கேதாரிகௌரி விரதம், அமாவாசை
24	9	வெ	பிர27-15	விசா19-8	சித்60	கார்த்திகசுத்தம் இன்றே சந்திரதரிசனம் உற்றுப் [பார்க்கவும்
25	10	சனி	துதி17-58	அனு11-40	சித்60	
26	11	ஞா	திரி9-35	கேட்4-58 மூல59-33	மர4-58அ	ஆலோசனகௌரி விரதம், நாகசதுர்த்திவிரதம்
27	12	திங்	சது2-35 பஞ்57-15	பூரா55-55	மர60	அவமாகம்
28	13	செவ்	சஷ்53-53	உத்54-10	அ54-10சி	கந்தர் சஷ்டி
29	14	புத	சப்52-33	திரு54-33	சி54-33பி	சர்வ முகூர்த்தம்
30	15	வியா	அ53-25	அவி56-58	சி56-58ம	கோவாஷ்டமி

கே	5உ வி-குரு 12 ,, து-புத 17 ,, விரு-சு 30 ,, விரு-பு		
			ராகு
		சுக்-ச சூ-கு	செ புத

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.